282

॥ ஸ்ரீ

1933
2-

அபிநவாசௌச ஸங்கரஹம்.

(தமிழ் மொழிபெயர்ப்பு)

ஸ்ரீநிவாஸ ப்ரஸ்

திருவையாறு.

1933.

R.34
N33.
178241

[அணா 4.

முகவுரை

OFFICE OF THE REGISTR...
2- ... 1933
MADRAS

ஸ்ரீமதே வாதிபீகர ராமாநுஜ
மஹாதேஶிகாய நம: ।

இந்த அபிநவாசௌசஸங்க்ரஹஸாரத்திற்கு மூலமான அபிநவாசௌசஸங்க்ரஹம் அடியேனால் ஒரு வருஷம் முன் நாகரலிபியில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அது அநேக விசாரங்களுடன் ஸம்ஸ்க்ருதத்தில் அருளிச்செய்யப் பட்டிருப்பதால் எல்லோரும் வாசித்து விஷயத்தைத் தானாக அறிந்துகொள்ளவேண்டி அடியேன் சில மகான்களின் நியமனத்தையனுஸரித்து விசாரபாகத்தை விலக்கி தீட்டுவிஷயத்தை மட்டும் தமிழில் எழுதியிருக்கிறேன். இந்த ஸம்ஸ்க்ருதக்ரந்தத்தினுடையவும் இதன் கர்த்தாவினுடையவும் சிறப்பு, தமிழ் ஸம்ஸ்க்ருதம் இவைகளிலிருக்கும் முகவுரைகளில் எழுதப்பட்டிருந்தும் எல்லோருக்கும் தெரியவேண்டி சுருங்க எழுதப்படுகிறது. இக்ரந்தகர்த்தாவான ஸ்ரீ ஸ்வாமி காஞ்சீபுரத்திற்கு ஸமீபத்திலிருக்கும் வேளியநல்லூர் என்ற கிராமத்தில் சென்ற இரண்டாம் ஸர்வதாரிவருஷத்தில் ஸ்ரீமந்நாதமுநிகள் வம்சத்தில் தன் முன்னோர்களைப்போல் வேதாத்யயனம், சாஸ்த்ர க்ஞானம், அனுஷ்டானம், வைராக்கியம், சாந்திமுதலிய நற்குணங்கள் நிறைந்த திருமலை சங்கபுரம் ஸ்ரீ விஜயராகவதாதாசார்ய ஸ்வாமியின் குமாரராய் அவதரித்தார். பிறகு தன் பிதாவால் ஸ்ரீராகவன் என்கிற நாமதேயம் வைக்கப்பட்டு கர்ப்பாஷ்டமத்தில் உபநயனம் செய்யப்பட்டு ஸமீபத்திலிருக்கும் அழ

178241

சூர் என்ற கிராமத்தில் வேதாத்யயனம் செய்தார். பிறகு காவ்யம், நாடகம், அலங்காரம் முதலியவைகளை தன் ஊரிலேயே வாசித்து, தர்க்கசாஸ்த்ரமப்யஸிக்கவேண்டி அக்காலத்தில் அனுக்ரமஸம்ப்ரதாயப்படி தர்க்சாஸ்த்ரத்தை முற்றிலுமப்யஸித்து அந்தசாஸ்த்ரத்தில் ஸ்வதந்த்ரராயும் சதகோடி என்ற கிரந்தம் செய்தவருமான மைசூர் ஸ்ரீராமசாஸ்த்ரிகளிடம் சென்று தர்க்கசாஸ்த்ரத்தை ஸம்பூர்ணமாகவும் பிரம்மாநந்தீயம் முதலிய அத்வைதக்ரந்தங்களையும் சில வித்யார்த்திகளுடனப்யஸித்து அவர்களுடன் தானும் பிரஸித்த வித்வானாகி ஸ்ரீ சாஸ்த்ரிகளால் மற்ற வித்யார்த்திகளின் க்ஞானத்தைக்காட்டிலும் உம்முடைய க்ஞானம் ஸர்வதோமுகமென்று கொண்டாடப்பட்டு மற்ற சாஸ்த்ரங்களையும் சிறந்த பண்டிதர்களிடமப்யஸித்து பிரசண்டபண்டிதராக ஊருக்கு எழுந்தருளினார். பிறகு கொடநகர் என்ற கிராமத்தில் எழுந்தருளியிருந்தார். பிறகு அக்காலத்தில் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்திற்கு மேற்கேயிருக்கும் ஆச்ரமத்தில் க்ஞானவைராக்யானுஷ்டானம் முதலிய ஸகல குணங்கள் நிறைந்து மஹர்ஷியாய் விளங்கிக்கொண்டும் தனது தபஸால் பகவானைத்தனக்கு ஸ்வாதீனமாக்கிக்கொண்டபடியால் பெரியாண்டவன் என்று எல்லோராலும் புகழப்பட்டும் பிரபல பண்டிதர்களான வெகு சிஷ்யர்களுக்கு வேதாந்தக்ரந்தப்ரவசனம் செய்துகொண்டுமிருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸமகாதேசிகன் ஸந்நிதிக்கெழுந்தருளி ஆசார்யர்களிடமிருந்தே க்ரஹிக்கவேண்டிய 4 வேதாந்தக்ரந்தங்களையும் அக்கிரந்தங்களைச் சேர்ந்த மற்றும் சில க்ரந்தங்களையும் அத்யயனம் செய்தார். பின் இவ்வாசார்யனால் ஸ்ரீ ரங்கனாதன் திருவடிகளில் பரஸமர்ப்பணம் செய்யப்பட்டு ஆசார்யநியமனத்தின் பேரில்

R34 N83

ஊருக்கெழுந்தருளினர். அப்போது தர்மசாஸ்த்ரார்த்தங்க
ளை பிரமாணம், ந்யாயம் இவைகளைக்கொண்டு நிஷ்கர்ஷம்
செய்வதில் அத்விதீயமான தனது பாண்டித்யத்தைக்குறி
க்கும் இந்தக்ரந்தம் அருளிச்செய்யப்பட்டது. சிறிது கால
த்திற்குப்பின் ஸுபானு வருஷத்தில் பெரியாண்டவன்
நியமனத்தையனுஸரித்து ஸ்ரீரங்கமெழுந்தருளி அவ்வாசா
ர்யன் பரமக்ருபையுடன் பிரஸாதித்த ஸந்யாஸாச்ரமத்தை
ஸ்வீகரித்து ஸ்ரீ பாதுகாஸேவகராமானுஜ மஹாதேசிகன்
என்கிற திருநாமம் வகித்து, ஸ்ரீரங்கம் காஞ்சீ முதலிய
திவ்யதேசங்களில் 10 வருஷங்கள் நல்ல சிஷ்யர்களுக்கு
வேதாந்தக்ரந்தங்களை அத்யாபனம் செய்துகொண்டும் ஒழி
ந்தகாலத்தில் ஸகலசாஸ்த்ரங்களிலும், ஸ்ம்ருதி, இதிஹாஸம்,
புராணம், பாஞ்சராத்ரஸம்ஹிதை இவைகளிலும், முத்ரித
க்ரந்தங்களையும், தாளபத்ரக்ரந்தங்களையும் அந்தந்த ஊரிலி
ருந்து வரவழைத்து அந்தந்த க்ரந்தம் கொடுத்தவர்களபிப்ரா
யப்படி கொஞ்சகாலத்திற்குள் க்ரந்தங்களைக்கடாக்ஷித்து
அவரவர்களுக்கனுப்பி, அந்தந்த காலங்களில் சாஸ்திரார்த்
தங்களில் அவரவர்கட்கேற்பட்ட சந்தேகத்தைப்போக்
கடித்து, உண்மை விஷயங்களை வெளிப்படுத்தவேண்டி ஆசா
ர்யர்களையே தெய்வமாக நினைத்து மங்களச்லோகங்கள் எழுதி
ஸத்பதரக்ஷை, ஆன்ஹிகார்த்தப்பிரகாசிகை, ஜன்மாஷ்டமீ
வேதநிர்ணயம், அதன் வியாக்யானம், ஸ்ரீஜயந்திநிர்ணயம்,
தத்க்ரதுந்யாயவிசாரம், உக்த்யாசார்யநிஷ்டாவிசாரம், ஆசா
ர்ய ஸம்பாவனைவிசாரம் முதலிய, அந்தந்த சாஸ்திரங்களின்
வாத க்ரந்தங்கள்போல் ஸர்வசாஸ்த்ரார்த்தவிசாரமுள்ளதா
யும் ப்ரௌடமுமான க்ரந்தங்களை அருளிச்செய்யும்போது,
அந்தந்த இடங்களில் பிரமாணமாகத்தான் கடாக்ஷித்த க்ர

409
230

ந்தங்களிலிருந்து கொஞ்சமும் மாறாமல் அதன் வாக்யங்களையே தன் ஞாபகசக்திவிசேஷத்தாலேயே உதாஹரித்தும் ஷடி க்ரந்தங்களில் பெரும்பாலும் தன் வாக்யங்களை உபயோகிக்காமல் ப்ராசீனமான பல பிரமாண கிரந்தங்களைக் கொண்டே ஸ்வஸித்தாந்தத்தை ஸ்தாபித்துமிருப்பதால் குருபக்தியுள்ளவர்கட்கு பிரதமோதாஹரணரென்றும், பிரமாணசரணரென்றும், சின்னண்டவனென்றும் எல்லாமஹான்களாலும் கொண்டாடப்பட்டும் தன் அவ்யாஜமான கர்மானுஷ்டானத்தாலேயே மற்றவர்களின் சாஸ்திரார்த்த சந்தேகங்களைப்போக்கடித்துக்கொண்டும் எழுந்தருளியிருந்து சிஷ்யர்களுடைய தௌர்பாக்யத்தால் அதிககாலம் எழுந்தருளிஇராமல் பெரியாச்ரமத்திற்கு கிழக்கே தன் சிஷ்யர்களால் ஏற்படுத்தப்பட்டும் தான் கொஞ்சகாலம் எழுந்தருளியிருந்ததுமான ஆச்ரமத்திலேயே விஜயவருஷத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

கம்பீரமான விசாரங்களடங்கிய இக்ரந்தம் அவச்யமறியவேண்டிய விஷயங்களெல்லாவற்றையும் ஓரிடத்தில் சேர்த்துத்தெரிவிப்பதாலும், வேறு க்ரந்தங்களில் விட்டுப்போன அம்சங்களை வெளிப்படுத்துவதாலும் அவைகளில் சொன்ன அம்சங்களை பரிஷ்கரித்து சொல்வதாலும், மற்றவைகளைக்காட்டிலும் மேன்மையுற்றது. அதனாலேயே இதற்கு இப்பெயரிடப்பட்டது. இதில் உதாஹரிக்கப்பட்ட க்ரந்தங்களாவன:— மிதாக்ஷரை, மனுஸ்மிருதி வ்யாக்யானம், வரதராஜீயதசகம், ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷை, ஸச்சரித்ரரக்ஷை, சததூஷணி, ஸ்மிருதிசந்திரிகை, ஸ்ம்ருதிரத்னம், மாதவீயம், அகபஞ்சஷஷ்டி வியாக்யானம், ஆசௌசசதகம், அதன் வ்யா

க்யானம், ஸூதீவிலோசனம், த்சநிர்ணயம், கண்டபூஷணம், தர்மப்ரதீபிகை, ஸ்ம்ருதி முக்தாபலம், முதலியன.

3 நாள் 1 ½ நாள் தீட்டுள்ளவர்கள் தங்கள் காலத்திற்குப்பிறகு 10 நாளுக்குள் மேற்படி தீட்டைக்கேட்டால் முறையே 1 நாள் ஒரு காலம் என்று சதகத்தில் சொல்லியிருப்பது விசாரிக்கவேண்டியிருக்கிறது. ஷை சதகத்தின் வியாக்யானத்தில் கடந்துபோன 3 நாள் தீட்டில் ஒரு தினத்தை விதிப்பதாக எழுதப்பட்ட "ஊர்த்வம் தசாஹாத்" என்ற வசனம் ப்ரகரணம் முதலியதால் பூர்ணசௌசம் கடந்துபோனபின் 6 மாதங்கட்கு மேற்பட்ட திணசௌசத்தையே விதிப்பதாக மிதாக்ஷரையில் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. தெலுங்கு சதகவ்யாக்யான புஸ்தகத்தில் "அந்தர் தசாஹாத் " என்ற பாடமிருக்கிறது. ஆகிலும் ஊர்த்வம் தசாஹாத் என்ற பாடத்தையே வைத்துக்கொண்டு மிதாக்ஷரையில் வியாக்யானம் செய்திருப்பதால் அதுவே பாடமாயிருக்கவேண்டுமென நினைத்து முக்தாபலத்திலும் இக்ரந்தத்திலும் விசாரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு வேறு பிரமாணம் காட்டப்படவில்லை. 1½ நாள் விஷயத்தில் ஷை வியாக்யானத்தில் காட்டியிருக்கும் "அதீதே பக்ஷிணீ காலே" என்ற வசனம் ஒரு நிபந்தனத்திலுமில்லாததால் விசாரிக்கவேணும் என்று முக்தாபலம் முதலியதில் சொல்லப்பட்டிருப்பதாலும் "ஊர்த்வமேவோபனீதே:" என்ற சதகச்லோக வியாக்யானத்தில் உதாகரிக்கப்பட்ட "பக்ஷிணீயோனிசம்பந்தே நாதிகாலே ந ஸூதகே" என்ற வசனத்தில் ஸ்பஷ்டமாய் அதிக்ராந்தாசௌசத்தை நிஷேதித்திருப்பதாலும் ஒரு காலம் தீட்டு கார்ப்பது சரியல்லவென்று

தர்ம ப்ரதீபிகை. பின்னும் "த்ரிராத்ரபக்ஷிண்யேகாஹேஷ்வ திதேஷ்வாப்லவோ பவேத்" என்ற தீபிகா வசனத்தில் த்ரிராத்ரம் முதலிய அதிக்ராந்தாசௌசத்தில் ஸ்நானமே சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் "பித்ரோர்ப்ராதுர்பவேத்" என்ற சதகச்லோக வியாக்யானத்தில் உதாஹரிக்கப்பட்ட "உபேதே விஷமம் வ்ருத்தே தஸ்மின்னேவாதிகாலஜம்" என்ற ச்லோகத்தின், பத ஸ்வாரஸ்யம் முதலியதை வெளிப்படுத்தும் வியாக்யானத்திலிருந்து 3 நாள் முதலிய தீட்டுள்ளவர்கட்கு அதிக்ராந்தாசௌசம் கிடையாதென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. ப்ரமாணவிருத்தமான ஆசாரம், இவ்விஷயத்தில் பிரமாணமாகாது. இவ்விஷயம் இந்த க்ரந்தத்திலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் சிஷ்டர்களான சில ஸ்மார்த்தர்கள் ஷடி அதிக்ராந்தாசௌசத்தை அனுஷ்டிப்பதில்லை.

இந்த க்ரந்தஸாரம் எழுதுவதற்குவேண்டிய புத்திபலம், தர்ம சாஸ்திரத்தில் ஞானம், அனுபவம் முதலிய ஸாதனங்களில்லாமலிருந்தும் அடியேனுக்குப்பிதாமஹனும் ப்ரபதனாசார்யனுமான க்ரந்தகர்த்தாவினுடையவும, தன் பிதாவினால் பஞ்சஸம்ஸ்காரம் செய்யப்பட்டவரும் பெரியாண்டவன் ஸந்நிதியில் வேதாந்தக்ரந்தங்களை அத்யயனம் செய்து அந்த ஆசார்யனால் பரஸமார்ப்பணம் செய்யப்பட்டவரும் ஸாஹித்யத்தில் நல்ல வ்யுத்பத்தி, கவனசக்தி, தர்க்கம் வ்யாகரணம் இவைகளில் ஸமுசிதஞானம், பகவான் எதிரிலிருந்துதான் செய்யுங்கார்யங்களை கவனித்து பலப்ரதானம் செய்ய ஸித்தமாயிருப்பதாய் நினைத்து பயந்து எக்காலத்திலும் குறைவில்லாமல் அவன் முகோல்லாஸத்திற்காகவே கர்மாக்களை அனுஷ்டித்தல், குருபக்தி, வைராக்யம், சாந்தி முதலிய

குணங்கள் அமைந்தவரும், அடியேனுக்கு ப்ரம்மோபதேசம் வேதத்தின் ஏகதேசத்திலத்யாபனம், பஞ்சஸம்ஸ்காரம், காவ்யபாடனம் இவைகளில் ஆசார்யனும், பிதாவுமான திருமலேசங்கபுரம் ஸ்ரீரங்கநாததாதாசார்ய ஸ்வாமியினுடையவும் அனுக்ரஹத்தால் புத்திக்கு எட்டினவரை எழுதியுள்ளேன். ஸம்ஸ்கிருதத்தில் அச்சிட்ட மூலக்ரந்தமும் இந்த ஸாரமும் சேர்ந்து 13 பாரங்களானாலும் எல்லோரும் விஷயத்தைத்தெரிந்துகொள்ளவேண்டுமென்றெண்ணியே இதன் விலே மிகக்குறைத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் கிருபை செய்து இக்ரந்தத்தை வாசித்து, ப்ரயோசனமடைந்து, அடியேனை தன்யனாகச்செய்ய ப்ரார்த்திக்கிறேன்.

பிரமாணசரணதாஸன்

வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதம்.

குறிப்பு:—இந்த ஸாரக்ரந்தத்தில் 16-வது பக்கம் 22-வது வரியில் தகனம் என்பதற்குமேல் 'செய்' என்பதுமுதல் 4 வரிகளும் அச்சுப்பிழை.

ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு.

ஸ்ரீ:

ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மகாதேசிகனருளிச்செய்த

அபிநவாசௌசஸங்கிரஹத்தின் ஸாரம்.

1. வேதாத்யயனம் முதலியவையை விலக்குவதற்கும் உதகதானம் முதலியவைக்குங் காரணமான புருஷனிடத்திலிருக்குமோர் விசேஷமே ஆசௌசமெனப்படுவது (மிதாக்ஷரை). ஸபிண்டன் முதலியோரின் பிறப்பு இறப்பு முதலியவை இருக்கும்பொழுது தானம் முதலிய காரியங்களில் அனதிகாரத்தை விளைவிப்பதாகவோ பாபவிசேஷரூபமாகவோ இருக்கும் அசுத்தியே ஆசௌசமென்னும் சொல்லுக்குப்பொருள் (ஸ்ம்ருதிசந்திரிகை). இந்த அசுத்தி தொடக்கூடாமை, கர்மாக்களைச் செய்வதில் யோக்கியதை இல்லாமை, என்று இரண்டுவகைப்பட்டது. இது காலத்தாலும் ஸ்நானத்தாலும் போகும். காலமென்பது தொண்ணூறு நாழிகை முதலியது. ஸ்நானமென்பது உடுத்திருக்கும் வஸ்திரத்துடன் கூடியதும் வேறு வஸ்திரத்துடன் கூடியதாயுமிருக்கும். சவம் உள்ளே இருக்கும்போது ஏற்படும் கிராமம் முதலியவைகளின் ஆசௌசம் காலத்தால் மாத்திரம் கழிக்கத்தக்கது. தகப்பனைத்தவிர மற்ற ஞ்ஞாதிகளுக்கு பிறப்பினாலுண்டாகும் ஆசௌசம் காலத்தால் மாத்திரம் கழிக்கக்கூடியதன்று காலம் ஸ்நானம் இரண்டினாலேயே கழிக்கக்கூடியது. கடந்துபோன குழந்தைகளின் பிறப்பால் ஏற்படும் தீட்டும் உறவினரென்றறியப்படாத ஸகோத்திரனுடையவும் பந்துவினுடைய

வும் மரணத்தாலேற்படும் தீட்டும் ஸ்நானத்தை முடிவாகக் கொண்ட தீட்டான ஸத்யச்சௌசமும் ஸ்நானத்தாலேயே கழிக்கக்கூடியது. ஸபிண்டன் ஸமாநோதகன் உறவினரென்றறியப்பட்ட ஸகோத்ரன் இவர்களின் பிறப்பினாலும் மரணத்தாலும் தாய் வகையைச்சேர்ந்தவர்களும் மற்றவர்களுமான பந்துக்களின் மரணத்தாலும் சேர்க்கையாலுமேற்படும் தீட்டு காலத்தாலும் ஸ்நானத்தாலும் கழிக்கத்தக்கது. அத்தீட்டு உறவினரின் மரணம், பிறப்பு, ரஜஸ் என்ற காரணங்களால் மூவகைப்பட்டது. பிறப்போ மரணமோ உண்டாயிருந்தபோதிலும் அறியப்படும்போதே தீட்டுக்குக் காரணமாகின்றன.

2. தீட்டில் செய்யவேண்டியதும் செய்யக்கூடாததும்.

கர்மாக்களை விடுதல், திரவியத்திற்குத் தீட்டு, வேதாத்யயனம் மந்திரஜபம் கொடுப்பது பெற்றுக்கொள்வது இவைகளைத் தள்ளுதல், மந்திரமில்லாமல் பிராணாயாமம் மற்றவிஷயத்தில் மனதால் மந்திரத்தைச் சொல்லல் இவைகளுடன் கூடின ஸந்தியாவந்தனம், பிரேதக்கிரியை, இவைகள் செய்யவேண்டியது. வேறு அதிகாரிகள் இல்லாதபோது அக்கினிஹோத்திரத்தை ஸ்நானம்பண்ணி செய்ய வேண்டும். வேறு அதிகாரி இருந்தால் அவரைக்கொண்டு அக்கினிஹோத்திரம் ஔபாஸனம் இவைகளைச் செய்விக்க வேண்டும். புத்திரன் பிறந்த தினத்தில் தீட்டு இல்லாதவர்கள், சமைக்கப்பட்ட அன்னத்தைத்தவிர்த்து பாக்கி வஸ்துக்களையும் தீட்டுள்ள க்ஞாதிகள் எல்லாவஸ்துக்களையும் வாங்கிக்கொள்ளலாம். நாராயணனைத் தவிர வேறு தேவதைகளின் பெயரைச் சொல்வது வைச்வதேவம் ஐந்து மகா

யக்ஞங்கள் இவை முதலியன செய்யக்கூடா. நாராயணன் பெயரைச் சொல்லலாம். மற்ற தேவதைகளை நினைக்கலாம். ரஜஸ்வலை, பிரசவித்தவள், சவத்தைத்தொட்டவன் இவர்கள் நாராயணன் பெயரைச் சொல்லவும் மற்றதேவதைகளை நினைத்தலும் கூடா. மனதால் பகவானை ஆராதிப்பது முதலிய செய்யக்கூடாது. வியாதி, பஞ்சம், அரசாங்கத்தில் குழப்பம், ஜீவனத்திற்கு வழியின்மை முதலிய ஆபத்துக்கள் மிகுதியாயிருக்கும்போது அந்த தினத்திற்கு மாத்திரம் வேண்டிய ஆகாரத்திற்காக சமையல் செய்யப்படாத வஸ்துக்களை எல்லோரும் தீட்டுக்காரரிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம். பிராம்மணனிடமிருந்து சமைக்கப்படாத பதார்த்தங்களையும் க்ஷத்திரியனிடமிருந்து பசுக்களையும், வைச்யனிடமிருந்து எல்லாத்தான்யங்களையும் வாங்கலாம். சூத்திரனிடமிருந்து ஒன்றும் வாங்கக்கூடாது. வயல் முதலிய இடங்களிலிருக்கும் தான்யம் எல்லோரிடமிருந்து எப்போதும் வாங்கத்தக்கது. தீட்டுக்காரனிடமிருந்து க்ஞாதிகள் சமைத்த அன்னத்தை வாங்கிக்கொள்ளலாம். இஷ்டி, பிண்ட யக்ஞம், சரு, ஹோமம் இவைகளை மற்றொருவனைக் கொண்டே செய்விக்கவேண்டும். தன் வஸ்து அன்று என்கிற நினைவாகிற (த்யாகம்) முக்கிய கர்மாவைத்தானே செய்யவேண்டும். இஷ்டி, பிண்ட யக்ஞம், சரு, ஹோமம் இவைகளை, தீட்டு வருவதற்கு முன் ஆரம்பித்திருந்தால்தான் அனுஷ்டிக்கவேண்டும். தீட்டிலும் மேற்கண்ட இஷ்டி முதலிய கர்மாக்களைச் செய்யவேண்டும் என்று விதித்திருப்பது கைமுதிகந்யாயத்தாலே ஸந்தியாவந்தனம் முதலியவைகளை அவச்யம் அனுஷ்டிக்கவேண்டுமென்று தெரிவிக்கிறது என்று சதுர்வியாக்கியானம். ஆசாரப்படி செய்துகொள்வது. தயிர்,

பால், நெய், கீரை, உப்பு, எள்ளு, மருந்து, விறகு, வேர், பழம், மாம்சம், தேன், கிணற்றுநீர், தோல், விற்பனைகுத்தயாராயிருக்கும் பொருள்கள், வெல்லம், கால் அல்லது அரைப்பங்கு ஜலம் சேர்ந்த மோர், இவைகளைத் தீட்டுள்ள ஸொத்துக்காரன் உத்திரவின்பேரில் தானே எடுத்துக்கொள்ளலாம். சமையல் செய்த பக்ஷியங்களையும் சமையல் செய்யப்படாத அரிசி முதலியவையும் எப்போதும் அன்னம் கொடுப்பவனிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம். தீட்டுள்ளவனிடமிருந்து அக்கினியை வாங்கக்கூடாது.

3. தீட்டில் சாப்பாட்டைப்பற்றின விசேஷம்.

சாதம் போடுகிறவன், சாப்பிடுகிறவன் இருவர்களுக்கும் தீட்டுத்தெரியாமலிருந்தால் சாப்பிடுகிறவனுக்கு தோஷமில்லை. இவர்களில் ஒருவருக்காவது தெரிந்திருந்தால் சாப்பிடுகிறவனுக்கு தோஷமுண்டு. அறிந்து சாப்பிடுகிறவன் பாக்கி நாள் தீட்டுக் காக்கவேண்டும். தீட்டுக்கழிந்த பிறகு சாந்திராயணம் செய்யவேண்டும். தெரியாமல் தீட்டு அன்னத்தை சாப்பிடுபவனுக்கு ஏழு நாள் தீட்டு. வாந்தி செய்தால் மூன்று நாள். அறியாமல் பிராம்மணன், தீட்டுள்ள சூத்திரனன்னத்தைச் சாப்பிட்டால் எண்ணாயிரம் காயத்திரீஜபத்தையும் தீட்டுள்ள வைச்யனன்னத்தைச்சாப்பிட்டால் ஐயாயிரம் காயத்திரீஜபத்தையும், தீட்டுள்ள க்ஷத்திரியனின் அன்னமுண்டால் மூவாயிரம் காயத்திரீஜபத்தையும் தீட்டுள்ள பிராம்மணன் அன்னத்தையுண்டால் இரண்டாயிரம் காயத்திரீ ஜபத்தையும் செய்யவேண்டும். தீர்த்தம் சாப்பிட்டால் பஞ்சகவ்யம் சாப்பிடுவது பிராயச்சித்தம். ஆபத்காலத்தில் தீட்டுள்ள அன்னத்தைத் தெரிந்து

உண்டால் ஒரு நாள் தீட்டு. க்ஞாதிக்கு இதில் தோஷ மில்லை. சாப்பாட்டின் மத்தியில் தீட்டு ஏற்பட்டால் இலையி லிருப்பதை மட்டில் உண்டு வேறு வீட்டின் தீர்த்தத்தைக் கொண்டு உத்தராபோசனம் ஆசமனம் இவைகளைச் செய்ய வேண்டும்.

4. பதிக்கு ஏற்படும் எல்லாத்தீட்டும் பத்னிக்குமுண்டு. மாமனார், மாமியார், மைத்துனன் இவர்களைத்தவிர மற்ற மனைவியைச்சேர்ந்த பந்துக்களின் மாணத்தில் பதிக்குத் தீட்டு இல்லை.

5. சேர்க்கையால் ஏற்படும் தீட்டு.

தீட்டுள்ளவர்களோடு அடிக்கடி சேர்க்கையிருந்தால் எவ்வளவு தினங்களில் சேர்க்கை ஏற்படுகின்றனவோ அவ்வளவு நாட்கள் தீட்டு. ஒருக்கால் சேர்க்கை ஏற்பட்டால் ஸ்நானம். சேர்க்கையாவது பிரேத கர்மாவை உபதேசித் தல், பிரேத கர்மாவைச்செய்தல், தீட்டுள்ளவர்களுடன் வசிப்பது, படுப்பது, சாப்பிடுவது முதலியன. சேர்க்கை யாலுண்டாகும் இத்தீட்டு, மனைவி, புதல்வன், திரவியம் இவர்கட்குக் கிடையாது. அவனுடைய கிரியைக்கு உண்டு. அதாவது தேவ பிதிரு கிரியைகளில் அவனுக்கு அதிகார மில்லை. சாவு தீட்டு உள்ளவனோடு சேர்க்கையில் தொடக் கூடாமை, கர்மானுஷ்டானத்தில் யோக்யதை யில்லாமை என்கிற இரண்டுவிதமான தீட்டு உண்டு. பிரசவத்தீட்டு உள் ளவன் சேர்க்கையில் கர்மாவைச் செய்வதில் யோக்யதை யில்லாமை என்கிற ஒருவிதமான தீட்டுதான்.

6. அதிக்ராந்தாசௌசத்தில் திரவியத்திற்குத் தீட்டுக் கிடையாது. மனைவிக்கும் கிரியைக்கும் தீட்டு உண்டு.

7. ஆபத்தையடைந்த ஸ்திரீ புருஷர்கள் செய்யும் ஜீவச்ராத்தத்தில் சிராத்தம் செய்பவனுக்கே பூர்ணமான தீட்டு. க்ஞாதி முதலியோருக்கு தீட்டு கிடையாது.

8. தீட்டு உள்ளவர்களைத்தொடும் விஷயம்.

சாவு தீட்டிலும், பிரசவத்தில் இரட்டைப்பிள்ளைகளின் பிறப்பிலும், பிரசவித்தவளோடு சேர்க்கையிலும் தகப்பனைத் தீட்டு முடியும் வரையிலும் மற்றவிஷயத்தில் ஸ்நானம் செய்யும் வரையிலும் தொடக்கூடாது. பிரசவத்தீட்டில் க்ஞாதிகளைத்தொட்டால் தோஷமில்லை. பிசவத்தில் நான்கு நாட்கள் தகப்பனைத் தொடக்கூடாது என்று சொல்வது சரியல்ல. தீட்டில்லாதவன் தீட்டுள்ளவனைத்தொட்டால் ஸ்நானமுண்டு. தனக்குத்தீட்டு இருக்கும்போது க்ஞாதி அல்லாத தீட்டுக்காரனை அறியாமல் தொட்டால் பிராஜாபத்திய க்ருச்சிரம், அறிந்து தொட்டால் ஸாந்தபனம் பிராயச்சித்தம். ஞாதியல்லாதவனும் பிரஸவத்தீட்டுள்ளவனுமான புருஷனைத்தொடக்கூடாது. சாவு தீட்டு உள்ளவன் ஸஞ்சயனத்திற்கு முன்பு தெரிந்து தீட்டுள்ள மற்றொருவனைத்தொட்டால் ஸாந்தபனம் பிராயச்சித்தம். அறியாமல் தொட்டால் அந்தப் ப்ராயச்சித்தத்தில் பாதி செய்யவேண்டும். ஸஞ்சயனத்திற்குமேல் தீட்டுள்ள வேறொருவனை அறிந்து தொட்டால் 3 நாள் விரதம் இருக்கவேண்டும். அறியாது தொட்டால் அதில் பாதி. பிரஸவ தீட்டுள்ளவன் அறிந்து சாவு தீட்டுள்ளவனைத் தொட்டால் இரண்டு ப்ராஜாபத்யங்களையும் அறியாதுபோனால் ஒரு ப்ராஜாபத்யத்தையும் ப்ராயச்சித்தமாகச் செய்யவேண்டும். அஸ்திஸஞ்சயனத்திற்குமேல் சரீரத்தைத்தொடுவது கலியில் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது.

9. சவமுள்ள கிராம விஷயம்.

கிராமத்தில் சவமிருந்தால் ஹோமம், வேதாத்யயனம் ஜபம், பூஜை, சாப்பாடு, ஜலமெடுப்பது முதலிய நித்யம் நைமித்திகம் காம்யமென்கிற கர்மாக்களைச் செய்யக் கூடாது. 44 முழ தூரத்திற்கு மேற்பட்ட வேறு வீதியில் கீழ்ச்சொல்லிய காரியங்களைச் செய்யலாம். ஒரே வீதியிலும் அக்னிஹோத்ரத்தைச் செய்யலாம். 400 பிராம்மணருள்ள கிராமத்தில் கீழ்ச் சொல்லிய தூரம் நடுவிலில்லாமல் போனாலும் நாற்சந்து அல்லது சந்தால் பிரிக்கப்பட்ட வேறுவீதியில் கர்மாக்களைச் செய்யலாம். சவமுள்ள கிராமத்தில் ஒரே வீதியில் 120 முழ தூரத்திற்குட்பட்டு தேவ கர்மங்கள் பிதிருகர்மாக்கள் இவை முதலியன செய்யக் கூடா. 1000 பிராம்மணர்களிருந்த போதிலும் சவமுள்ள கிராமத்தில் ஒரு வீதியில் 120 முழத்திற்குள் தேவபூஜை திருமஞ்சனம் முதலியன செய்யக் கூடா. † குடிக ‡ கர்ப்பட ராஜதானி இவைகளில் தேவபூஜை செய்யலாம். முனி, துறவி, பிறர் சரீரத்தில் புகுந்தவன், ஸ்திரீ, சூத்திரன், பாலன், காப்பாற்றுபவரில்லாதவன் இவர்களின் மரணத்தில் கிராமத்திற்குத் தீட்டில்லை. சூத்திரஜாதி தவிர வேறு ஜாதியில்லாத கிராமத்தில் சூத்திரமரணத்தில் அந்தக் கிராமத்தில் சவமடங்கியிருப்பதால் ஏற்படும் தோஷமுண்டு. கிராமதேவதை வீட்டு தேவதை இவைகளின் பூஜையின் நடுவில் மரணம் நேர்ந்தால் மந்திரமில்லாமல் செய்கையினாலேயே பாக்கி பூஜையை முடிக்க வேண்டும். தேவப்ரதிஷ்டை, விவாஹம்

---

† குடிசை. ‡ வியாபாரமுள்ள பட்டணம் அல்லது மலையடிவாரத்திலிருக்கும் கிராமம்.

உபநயனம் இவை முதலியன இடையில் மரணம் ஸம்பவி த்தால் கிராமத்திற்கு வெளியில் சவம் கொண்டு போகப்ப ட்ட பிறகு பாக்கி கர்மாவை முடிக்க வேண்டும்.

10. ஸபிண்டன் முதலியோரின் தீட்டு.

புருஷனுக்கு ஒரே ஜாதியில் ஏழுதலைமுறை வரை யிலும் கன்னிகைக்கு மூன்று தலைமுறை வரையிலும் உள்ள வர்கள் ஸபிண்டர்களாவார்கள். 8-வது தலைமுறை முதல் 14-வது தலைமுறை முடிய சமானோதகராவார்கள். பிறப்பு, பெயர் இவை தெரியாவிடில் 14-வது தலைமுறைக்கு முன்பே சமானோதகன் என்ற வியவகாரம் நீங்கி விடுகிறது. தேசா ந்தரத்திலிருப்பவன் விஷயத்தில் பிறப்பு பெயர் இரண்டும் தெரிந்தாலும் 10-வது தலைமுறை வரைதான் சமானோதகன் என்ற வியவஹாரம். இவ்வியவஹாரம் நீங்கியபின் சகோத் ரன் என்ற வியவஹாரம் ஏற்படுகிறது. பிராம்மணனுக்கு சபிண்டனின் பிறப்பிலும் உபநயனம் செய்யப்பட்ட சபிண் டனின் மரணத்திலும் பத்து நாள் தீட்டு. ஷை விஷயத் தில் க்ஷத்திரியனுக்கு 12 நாளும், வைச்யனுக்கு 15 நாளும், சூத்திரனுக்கு 1 மாதமும் தீட்டு. பஞ்சஸம்ஸ்காரம் செய்யப்பட்ட ப்ராம்மணதாஸர்களான சூத்திரர்களுக்கு 15 நாள் தீட்டு. உபநயனம் செய்யப்படாதவன் விஷயத்தில் விசேஷம் மேலே சொல்லப்படும். ஸமானோதகன் பிறப்பி லும் உபநயனமானபிறகு அவனுடைய மரணத்திலும் 3 நாட்கள் தீட்டு. உபநயனம் செய்யப்படாதபோது அவ னுக்கு மரணம் நேர்ந்தால் ஸ்நாநம். 14 தலைமுறைக்கு மேல் பிறப்பு பெயர் இவை தெரிந்தால் ஸகோத்திரனின் பிறப்பு முதலியவற்றில் 1 நாள் தீட்டு. இவைகள் தெரியா தபோது மரணம் நேர்ந்தால் ஸ்நானம். வேறு ஜாதியில்

3 தலைமுறை வரையில் ஸபிண்டன் என்ற வியவகாரம். ஆபத்காலத்தில் பிராம்மணனுக்கு ஸபிண்டர்களான க்ஷத்திரியன், வைச்யன், சூத்ரன், இவர்களின் பிறப்பு முதலியவை யில் முறையே 6 நாளும், 3 நாளும், 1 நாளும் தீட்டு. க்ஷத்ரியனுக்கு ஸபிண்டர்களான வைச்யன் சூத்ரன் இவர்களுடைய பிறப்பு முதலியவையில் முறையே 6 நாளும் 3 நாளும் தீட்டு. வைச்யனுக்கு ஸபிண்டனை சூத்ரனது பிறப்பு முதலிய வையில் 6 நாள் தீட்டு. ஸபிண்டனை பிராம்மணன் பிறப்பு முதலியவையில் க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர ஸ்திரீகளிடத்தில் பிராம்மணனால் உண்டாய் பாகம் செய்து கொள்ளாமலிருப்போர்க்கு 10 நாள் தீட்டு. பாகமாயிருந்தால் அவர்களுக்கு அவர்கள் தாய்ஜாதிக்கு ஏற்பட்ட தீட்டு. பிரதிலோமாளுக்கு (கீழ் ஜாதிபுருஷனால் மேல்ஜாதி ஸ்திரீகளிடம் உண்டானவர்கள்)ஸபிண்டர்களின் பிறப்பு முதலியவையில் சூத்ரனுக்கு ஸமமான தீட்டு. சூத்ரனால் ஜனித்த பிரதிலோமர்களுக்கு தீட்டில்லை. சாவில் ஸ்நானந்தான்.

11. முக்கிய கர்த்தா முதலியோர் தீட்டு.

முக்கிய கர்த்தாவிற்கும் மற்ற பிள்ளைகளுக்கும் தங்கள் தீட்டு போன பிறகு ஸபிண்டீகரணம் வரையில் கர்மானுஷ்டானத்தில் யோக்யதையில்லாத்தீட்டு. குருகுலத்தில் வசிக்கிற சிஷ்யன், ஸ்வாமி கிருஹத்தில் வசிக்கும் படியான தாஸன், ஆறு மாதத்தை வருஷமாகக் கணக்குப் பண்ணி கூலி வாங்குகின்றவன் இவர்களும் தங்கள் ஸபிண்டர்களின் ஜனனம் முதலியதில் குருவினுடையவும் ஸ்வாமியினுடையவும் வர்ணத்திற்குச் சொன்ன தீட்டை அனுஷ்டிக்கக்கடவர்கள். கர்பதாஸன் முதலாகவும் பக்த

தாஸன் முடிவாகவும் கொண்ட 12 பெயர்களுக்கு தன் ஸபிண்டர்களின் ஜனனம் முதலியன எங்கு ஏற்பட்டாலும் தன் ஜாதிக்குச் சொல்லப்பட்ட தீட்டுண்டு. சக்ராங்கிதனான சூத்ரனுக்கு பாதி மாதம் தீட்டு. அனுலோம தாஸிக்கு 15 நாட்கள். பிரதிலோமதாஸிக்கு 1 மாதம். தாஸர்முதலியோர்க்கு ஸ்வாமிக்குள்ள சுத்திகாலத்தினாலேயே தொடயோக்யதை யுண்டு. மாதம் முடியும் வரையில் கர்மாவில் அதிகாரம் இல்லை.

12. கலியுக விஷயம்.

தலைமுறைப் பற்றின தீட்டான கிரமாசௌசமும் வேதாத்யயனம் முதலியன நிமித்தமாய் ஏற்படும் குணாசௌசமும் கலியில் மறுக்கப் பட்டிருக்கிறது.

13. கர்ப்பத்தின் ஸ்ராவம் பாதம் இவைகளாலேற்படும் தீட்டின் தீர்மானம்.

4 மாதங்களில் ஏற்படும் கர்ப்பநாசம் ஸ்ராவமென்றும் 5 வது 6 வது மாதங்களில் பாதமென்றும் சொல்லப்படுகிறது. 7 வது முதலிய மாதங்களில் பிரஸவம் ஏற்படுகிறது. 3 மாதங்களில் கர்ப்பம் ஸ்ரவித்தால் தாய்க்கு 3 நாள் தீட்டு. 4, 5, 6 வது மாதங்களில், மாதக் கணக்குள்ள நாட்கள் தீட்டு. 7 வது முதலிய மாதங்களில், பூர்ணமான தீட்டு. கர்ப்ப ஸ்ராவம் முதலியதில், தாய்க்கு எவ்வளவு மாதங்களாகின்றனவோ அவ்வளவு நாள் தொடக் கூடாமையாகிய தீட்டு. கர்ப்பஸ்ராவமோ கர்ப்ப பாதமோ ஏற்பட்ட தினம் முதல் 20 நாட்கள் வைதீக கர்மாவில் யோக்கியதை யில்லாமையாகிய தீட்டு. பிறகு ஸ்நானத்தால் சுத்தி.

4 மாதங்களில் தகப்பனுக்கே ஸ்நானம். க்ஞாதிகளுக்கில்லை. த்ரவரூபமான பாதத்தில் தகப்பன் முதலிய க்ஞாதிகளுக்கு ஸ்நானம். கடின பாதத்தில் 3 நாட்கள் தீட்டு. ஸபிண்டர்களுக்கு 3 நாட்கள் தீட்டு. சொல்ல வேண்டிய இடங்களில் தினத்தை விதித்தது அவ்வூரிலில்லாதவனைப்பற்றினது. 7-வது 8-வது மாதங்களில் தாய் தவிர பாக்கி ஸபிண்டர்களுக்கு மாதக்கணக்குப்படி தீட்டு. (சந்திரிகை, ஸ்மிருதிரத்னம், மாதவீயம்). தாய் தகப்பன் உடன்பிறந்தோன் இவர்களைத்தவிர மற்ற ஸபிண்டர்களுக்கு இந்தத்தீட்டு (முக்தாபலம்). 9-வது முதலிய மாதங்களில் எல்லோருக்கும் தன் ஜாதிக்குச் சொல்லப்பட்ட தீட்டு.

14. பிரஸவித்திருக்கும் ஸ்திரீயின் தீட்டு.

பிரஸவித்திருக்கும் பிராம்மண க்ஷத்திரிய வைச்ய ஸ்திரீகளுக்கு 10 நாள் வரையில் 3 நுகத்தடி விலகியிருப்பது, பேச்சை பிறர் கேட்க்கக்கூடாமை, பார்க்கக்கூடாமை இவைக்குக்காரணமான தீட்டு. தொடாமை முதலியவைக்குக்காரணமான தீட்டு முறையே அவர்கள் ஜாதிகளுக்குச் சொல்லப்பட்ட 10, 12, 15, நாட்கள் வரையில். கீழ்க்கண்ட ஸ்திரீகளில் ஆண் பிள்ளை பெற்றவளுக்கு 20 நாள் வரையிலும், பெண்ணைப் பெற்றவளுக்கு 1 மாதம் வரையிலும் தானம் முதலிய கர்மாவில் அதிகாரமில்லாமையாகிற தீட்டு. சூத்ரஸ்திரீக்கு 13 நாட்கள் வரையில் 3 நுகத்தடி விலகுவது முதலியவைக்குக் காரணமான தீட்டு. ஆண் பிள்ளையையோ பெண்ணையோ உண்டு பண்ணினாலும் கர்மாவில் அதிகாரமில்லாமையாகிற தீட்டு 1 மாதம் வரையில். பெரியோர்களின் ஆசாரப்படி எல்லா வர்ணங்களுக்கும் பொதுவாக

பெண்ணைப் பெற்றவளுக்கு 40 தினங்களும், ஆண் பிள்ளை பெற்றவளுக்கு 30 தினங்களும் தீட்டு. 10 நாளைக்குமேல் தொடக் கூடாமையாகிற தீட்டில் பெரியோர்களின் ஆசாரம் ப்ரமாணம். பிரஸவித்தவள் பேச்சை 10 நாட்கள் கேட்கக் கூடாதென்பதற்கு போஜனாதி காலத்தில் கேட்கக் கூடாதென்றே கருத்து. சாப்பாட்டு நடுவில் பிரஸவித்தவளைப்பார்த்தால் ஸ்நானம் செய்து 'மானஸ்தோகே' என்கிற ருக்கை ஜபம் செய்யவேண்டும். வேறு சமயத்தில் பார்த்தால் சூரியனைப் பார்ப்பதும், பேசினால் பிராம்மணனுடன் பேசுவதும் பிராயச்சித்தமாம்.

பிரஸவத்தீட்டைக் காட்டிலும் சாவுத்தீட்டு இரு மடங்கு அதிகம். சாவுத்தீட்டைக் காட்டிலும் ரஜஸ்வலையின் தீட்டு இரு மடங்கு அதிகமானது. ரஜஸ்வலையின் தீட்டைக் காட்டிலும் பிரஸவித்திருக்கும் ஸ்திரீயின் தீட்டு இரு மடங்கு அதிகம். பிரஸவித்திருக்கும் ஸ்திரீயின் தீட்டைக் காட்டிலும் சவத்தைக் கொளுத்துவதால் ஏற்படும் தீட்டு இரு மடங்கு அதிகமானது. அறிந்து பிரஸவித்திருக்கிற ஸ்திரீயைத் தொட்டால் உடுத்தியிருக்கும் துணியுடன் ஸ்நானம் செய்வது, நெருப்பைத் தொடுவது, நெய்யைச் சாப்பிடுவது இவைகளால் சுத்தி. அறியாமல் தொட்டால் ஸ்நானம்.

15. பெண் பிறப்பில் உண்டாகும் தீட்டு.

பெண் பிறப்பில் ஆபத்தில்லாதபோது ப்ராதா, பின்னோதர ப்ராதா, தகப்பன், அவன் ப்ராதா, இவர்களின் பிள்ளை, பிதாமகன், அவன் ப்ராதா இவர்களுக்குப் பூர்ணமான தீட்டு. ஆபத்தில் பெண் பிறந்தால் அப்பெண் ஸபிண்டர்களுக்கு 3 நாட்கள் தீட்டு.

16. பெண்ணின் மரணத்திலுண்டாகும் தீட்டு.

சௌளம் என்னும் ஸம்ஸ்காரம் வரையில் பெண் மரணத்தில் அப்பெண் ஸபிண்டர்களுக்கு ஸ்நானத்தால் சுத்தி. சௌள ஸம்ஸ்காரத்திற்குப் பிறகு பெண்ணை விவாஹம் செய்துகொடுப்பதாய்ச் சொல்லும் வரையில் 1 நாள் தீட்டு. அப்படிச் சொன்னது முதல் விவாஹம் வரையில் பர்த்தாவைச் சேர்ந்தவர்களிலும் பிதாவைச் சேர்ந்தவர்களிலும் ஸபிண்டர்களுக்கு 3 நாள் தீட்டு. தகப்பன் வீட்டில் ரஜஸ் ஏற்பட்டபிறகு கன்னிகை மரித்தால் ஸபிண்டர்களுக்கு தன் ஜாதிக்கு சொல்லப்பட்ட தீட்டு என்று சதகவியாக்கியானம், மிதாக்ஷரை, ஸ்ம்ருதிசந்திரிகைமுதலியன. சௌளம் வரையிலோ 3 வருஷங்கள் வரையிலோ பெண் மரணத்தில் ஸ்நானத்தால் சுத்தி. சௌளத்திற்கோ 3 வருஷங்களுக்கோ பிறகு பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்வதற்கோ கர்ப்பவாசத்திலிருந்து எட்டாவது வயதிற்கோ முன்பு 1 நாள். பெண்ணைக் கொடுப்பதாகச் சொன்னதற்குப் பிறகோ 8 வது வருஷம் முதலோ பெண் ஸபிண்டர்களுக்கு 3 நாள் தீட்டு. கன்னிகைக்கு விவாஹம் ஆகிவிட்டால் பர்த்தாவைச் சேர்ந்த ஸபிண்டர்களுக்கும் 3 நாட்கள் தீட்டென்று முக்தாபலம். ஆசாரப்படி வ்யவஸ்தை. விவாஹம் செய்துகொடுப்பதாகச் சொல்லப்பட்டும் விவாஹமாகாதவளுமான பெண்ணுக்கு ரஜஸ் ஏற்பட்டு மரித்தால் பர்த்தாவைச் சேர்ந்தவர்களுக்கும் பூர்ணமான தீட்டு.

17. பாலனின் ஸம்ஸ்காரத்தைப் பற்றின நிர்ணயம்.

சௌளம் என்னும் ஸம்ஸ்காரத்திற்குப் பிறகோ 3 வரு

ஷங்களுக்குப் பிறகோ இறந்து போன பாலனுக்கு தகனமே ஸம்ஸ்காரம். பெயரிடுவதற்கோ 11 வதுநாளைக்கோ முன்பு மரித்துப் போனவனுக்கு புதைப்பதுதான் ஸம்ஸ்காரம். பெயரிடுவதற்கோ 11 வது நாளைக்கோ பின்பும் பல் முளைப்பதற்கோ 6 வது மாதத்திற்கோ முன்பும் இறந்தவனுக்கு புதைப்பது அல்லது கொளுத்துவது ஸம்ஸ்காரம். பல் முளைப்பதற்கோ 6 வது மாதத்திற்கோ பிறகும், சௌளம் என்னும் ஸம்ஸ்காரத்திற்கோ 3 வருஷத்திற்கோ முன்பும், இறந்து போனவனுக்கு புதைப்பதோ கொளுத்துவதோ எறிவதோ ஸம்ஸ்காரமாம்.

18. பால மரணத்திலுண்டாகும் தீட்டு.

பல் முளைப்பதற்கோ 6-வது மாதத்திற்கோ முன்பு இறந்துபோனவனைப் புதைத்தால் ஸ்நானத்தால் தீட்டு நீங்கும் கொளுத்தினுல் ஒருநாள் தீட்டு. பல்முளைப்பதற்கோ 6-வது மாதத்திற்கோ பின்பு புதைத்தால் 1 நாள். கொளுத்துவது எறிவது இவைகளில் 3 நாள். இறந்துபோன தினத்திற்கு மறுநாள் கீழ்ச்சொன்ன ஸம்ஸ்காரங்களைச் செய்யும்போது இறந்துபோன தினம்முதல் தீட்டு இருந்தாலும் கீழ்ச்சொன்ன ஸம்ஸ்காரம் செய்ததினம் முதலே ஸ்நானமாத்திரத்தால் நீங்கும் ஸத்யச்சௌசம், தினம், 3 நாள் என்கிற தீட்டின் வியவஸ்தையைக் கைக்கொள்ளவேண்டும். தாய், தகப்பன், உடன்பிறந்தவன், பின்னேதரன் இவர்களுக்கு மரணம் முதலியதிலிருந்தே தீட்டு. ஸம்ஸ்காரம் முதலாக இல்லை. பிராம்மணஜாதியில், தாய், தகப்பன், ஸோதரன் பின்னேதரன் இவர்களுக்கு 11-வது நாள் முதல் பால மரணத்தில்

பூர்ணமான தீட்டு, என்று சதக வ்யாக்யானம். 11-வது நாள் முதல் எல்லா வர்ணங்களிலும் பாலன் மரித்தால் தாய் முதலியோருக்கு 3 நாள் தீட்டு. என்று முக்தாபலம். தேசாசாரப்படி வியவஸ்தை. கொளுத்தினல் உதகதானம், பிண்டதானம் முதலியன செய்யவேண்டும். 5-வது ஆண்டுமுதல் சஞ்சயனம். கன்னிகையின் மரணத்தில் ஏதோ ஒரு ஸம்ஸ்காரத்தைச்செய்தல், ஸம்ஸ்காரத்திற்குப் பின்பே விதிக்கப்பட்ட தீட்டை அனுஷ்டிப்பது. தாய் முதலியோரின் தீட்டின் வியவஸ்தை, உதசதானம், பிண்டதானம், ஸஞ்சயனம் முதலியது இவைகளை பால மரணத்தில்போல அனுஷ்டிக்கவேண்டும். விவாஹமானவள் 3 வருஷங்களுக்கு முன்பு மரித்தால் தகனமே ஸம்ஸ்காரம். என்று சதக வியாக்யானம். அந்தப் பெண்ணைப் புதைத்து எடுத்துக்கொளுத்தவேண்டும் என்று முக்தாபலம். ஆசாரப்படி வியவஸ்தை. கன்னிகை, பாலன் இவர்களின் மரணத்தில் சொல்லப்பட்ட தீட்டு, எல்லாவர்ணங்களுக்கும் பொதுவானது.

19. சௌளத்திற்கு பின்பு உண்டாகுந்தீட்டு.

சௌளத்திற்கோ 3 வருஷத்திற்கோ பின்பும், உபநயனத்திற்கோ கர்ப்பத்திலிருந்து 8-வது வயதிலிருந்தோ முன்பும், பிராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன் இவர்களின் மரணத்தில் 3 நாள் தீட்டு. உபநயனத்திலிருந்தோ, கர்பத்திலிருந்து 7-வது வயதிலிருந்தோ, பின்பு அவர்களின் மரணத்தில் தங்கள் சாதிக்கு சொல்லப்பட்ட தீட்டு. சூத்ர பாலன் மரணத்தில் சௌளத்திற்கோ 3 வருஷத்திற்கோ பிறகும் கர்ப்பத்திலிருந்து 7-வது வயதிற்கு முன்பும்

3 நாள் தீட்டு. கர்ப்பத்திலிருந்து 6-வது வயதிற்குப் பிறகு தன் சாதிக்குள்ள தீட்டு.

20. இரவில் பிறப்பு, ரஜஸ், மரணம் இவைகளேற்பட்டால் அரை யாமங்களான இரண்டு ஸந்தியாகாலங்களை விலக்கி மூன்றாகப் பிரிக்கப்பட்ட இரவு நாழிகைகளில் 3-வது பாகத்தில் அவைகள் நேர்ந்தால் மறுநாள் முதல் தீட்டு. முன்னிரண்டு பாகங்களில் நேர்ந்தால் முதல்நாள் முதல் தீட்டு.

21. அக்னியாதானம் செய்தவர் செய்யாதவர் விஷயம்.

அக்னியாதானம் செய்தவர் அருகிலிறந்தால் இறந்து போன தினம்முதல் தீட்டு இருந்தபோதிலும் தகனம்முதலே தன் சாதிக்குச் சொல்லப்பட்ட தீட்டு. அக்னியாதானம் செய்யாதவர் இறந்தால் மரணம்முதலே தீட்டு. இருவர்களுக்கும் தகனதினம்முதலே ஸஞ்சயனம். இறந்து போன நாளே சிராத்ததினம் என்று சதகவியாக்யானம். அக்னியாதானம் செய்யாதவர்க்கு மரணம்முதலும் ஸஞ்சயனம் செய்யலாம். ஆசாரப்படி வியவஸ்தை. அக்னியாதானம் செய்தவர், அவர் பார்யை இவர்களை வைதிக அக்னியால் தகனம் செய்தால் தகனம் முதலேதீட்டு. வேறு அக்னியால் தகனம் செய்தால் மரணம்முதலே தீட்டு. வேறு அக்னியால் தகனம் செய்தாலும் தகனம்முதலே தீட்டு என்று சிலர். ஆசாரப்படி வியவஸ்தை என்று முக்தாபலம். அக்னியாதானம் செய்தவரை மந்திரத்துடன் தகனம் செய்யாதபோது தீட்டுக் கிடையாது. மந்திரத்துடன் மறுபடி தகனம் செய்தால் தகனம்செய்ததுமுதல் பூர்ணமான தீட்டு. 10 நாள் முதலியவைக்கு நடுவிலோ அதற்கு வெளிப்பட்டோ அக்னியாதானம் செய்தவரை மறுபடி தகனம்

செய்யாதபோது தீட்டுக்கிடையாது. மந்திரத்துடன் மறுபடி தகனம் செய்தது முதல் பூர்ணமான தீட்டு. 10 நாள் முதலியவைக்கு நடுவிலோ அதற்கு வெளிப்பட்டோ அக்னியாதானம் செய்தவரை மறுபடி தகனம் செய்தால் தகன தினம் முதல் பூர்ணமான தீட்டு. அக்னியாதானம் செய்யாதவரை மறுபடி தகிப்பதற்கு முன்பு தீட்டுக் கார்க்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை. 10 நாள் முதலியவைக்கு நடுவில் மறுபடி அவரைத் தகனம் செய்தால் பாக்கிநாள் தீட்டு. 10 நாளைக்கு மேல் எலும்பைத் தகனம் செய்தால் முன் தீட்டுக் கார்க்காமலிருந்தால் ஸபிண்டர்களுக்குப் பூர்ணமான தீட்டு. தர்ப்பத்தால் செய்யப்பட்ட பிரதிகிருதியை தகனம் செய்தால் 3 நாள் தீட்டு. முன் தீட்டுக்கார்த்தால் உதகதானம் செய்யாவிடில் 3 நாள். உதகதானம் செய்யப்பட்டிருந்தால் ஒன்றுமில்லை. புத்திரன் தீட்டுக் காத்திருந்தாலும் கார்க்காமலிருந்தாலும் எலும்பையோ பிரதிகிருதியையோ தகனம் செய்தால் பூர்ணமான தீட்டு. முன் புத்திரன் தீட்டுக் காத்திருந்தால் 3 நாள் என்று சொல்லும் விதி ஆபத்து முதலியதில் 3 நாளுதகதானஞ் செய்வதையோ ஔரஸனை பிள்ளையைக் காட்டிலும் வேறு பிள்ளையையோ குறிக்கின்றது என்று சதகவியாக்யானம். தீட்டு சென்ற பிறகு மறுபடியும் தகனம் செய்தால் முன் தீட்டுக் கார்க்காமலிருந்தால் பிள்ளைக்கும் பத்னிக்கும் 10 நாள் முதலிய தீட்டு. ஷை இருவரும் தீட்டுக் காத்திருந்தால் 3 நாள். பர்த்தா பார்யை இவர்களுக்கும் ஸபத்னீகளுக்கும் ஒருவர்க்கொருவர் இவ்விதமே தீட்டு. எலும்பையோ பிரதிகிருதியையோ கொளுத்துவதில் தீட்டுக் கார்க்காத க்ஞாதிக

ளுக்கு 3 நாள். தீட்டுக் கார்த்தும் உதகதானம் செய்யாமலிருந்தால் உதகதானத்தால் 1 நாள். உதகதானம் செய்திருந்தால் தீட்டில்லை என்று முக்தாபலம். ஆசாரப்படி வ்யவஸ்தை. வெகு ஸபிண்டர்களை மறுபடியும் தகனம் செய்தால் ஒரே சமயத்தில் ஸம்ஸ்காரத்தையும் 3 நாளில் கிரியைகளையும் தனித்தனி பிண்டதானத்தையும் 4-வது நாள் ஏகோத்திஷ்டத்தையும் 5-வது நாள் சேர்ந்தோ தனியாகவோ ஸபிண்டீகரணத்தையும் செய்யவேணும்.

22. தேசாந்தரம் சென்ற தாய் தகப்பன் விஷயம்.

தாய் தகப்பன் தேசாந்தரத்தில் இறந்ததாகக் கேட்டால் புத்திரர்களுக்கு எப்போதும் 10 நாள் தீட்டு. 1 வருஷத்திற்கு முன் ஸபத்னீ மாதா தேசாந்தரத்தில் இறந்ததாய்க் கேட்டால் பூர்ணமான தீட்டு. வருஷத்திற்கு பிறகு 3 நாள். தமயன் தகப்பனுக்கு உத்தரகிரியை செய்த பிறகு வருஷம் சென்றபிறகு தம்பிகளுக்கு 3 நாள். தம்பி தகப்பனுக்கு உத்தரக்கிரியை செய்திருந்தால் வருஷத்திற்கு பிறகு தமையனுக்கு 10 நாள். ஸபத்னீ மாதாவுக்கு உத்தரக்கிரியை நடந்திருந்தால் வருஷத்திற்குப் பிறகு தினம். பர்த்தாவுக்கு உத்தரக்கிரியை நடக்காதபொழுது பார்யை கர்த்தாவாக இருந்தால் 10 நாள் தீட்டு. தகப்பன், பாட்டன், பாட்டனுக்கு தந்தை, ஜ்யேஷ்டப்ராதா, ஆசார்யன் இவர்களிறந்ததாக வருஷத்திற்குப்பிறகு கேட்டாலும் சாஸ்திரப்படி ப்ரேதகிரியைகளைச்செய்யவேணும். ப்ராதாவுக்கு உத்தரக்கிரியை நடக்காமலிருந்தால் 6 மாதங்களுக்குட்பட்டு 10 நாள். அதற்கு மேல் வருஷம் வரையில் 3 நாள். தகனம் செய்யும் ப்ராதாவுக்கு 10 நாள். ப்ராதாவுக்கு

உத்தரக்கிரியை நடந்திருந்தால் 6 மாதங்களுக்கு முன்பு 3 நாள். அதற்கு மேல் வருஷம் வரையில் 90 நாழி என்று முக்தாபலம். இப்படி ப்ராத்ரு விஷயத்தில் சொன்ன தீட்டில் சிஷ்டாசாரமில்லை யென்று சதகவியாக்யானம். ஆசாரப்படி வ்யவஸ்தை.

23. தூர தேசத்திலுண்டான ஸபிண்டன் முதலி யோரின் பிறப்பு முதலிய விஷயம்.

தூர தேசத்திலுண்டான ஸபிண்டன் முதலியோரின் பிறப்பு முதலியவற்றை 10 நாளுக்குட்பட்டுக் கேட்டால் பாக்கி நாள் தீட்டு. ஸஞ்சயனத்திற்கு முன் தேசாந்தரம் சென்ற பிதாவின் மரணத்தைக் கேட்டால் முக்ய கர்த் தாவான புத்திரனுக்கும் பாக்கி நாள்தான் தீட்டு. ஸஞ் சயனத்திற்கு பிறகு கேட்டால் கேட்ட தினம் முதல் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட தீட்டு. ஸஞ்சயனம் செய் யாத போனுலும் 4-வது தினத்திற்கு முன் தகப்பன் மரண த்தைக்கேட்டால் பிராம்மணனுக்கு பாக்கி நாள். 4-வது நாள் முதல் ஷ்டி மரணத்தைக் கேட்டால் 10 நாள் என்று சிலர். ஆசாரப்படி வ்யவஸ்தை.

24. மகா குரு விஷயம்.

சாஸ்திரப்படி புத்திரனை யுண்டு பண்ணி உபநயனம் முதலிய ஸம்ஸ்காரத்தைச் செய்து வேதாத்யயனம் செய்வி த்து வீடு வயல் தனம் முதலிய விருத்தியை எந்தத் தகப் பன் ஏற்படுத்துகிறுனே அவன் மகாகுரு எனச் சொல் லப்படுகிறுன். அவனுடைய மரணத்தில் அவன் புத்திர னுக்கு 12 நாள் தீட்டு.

25. கடந்து போன தீட்டு.

பத்து நாளைக்கு மேல் கடந்துபோன ஸபிண்டனின் மரணத்தைக் கேட்டால் 3 மாதங்களில் 3 நாள் தீட்டு. அதற்கு மேல் 3 மாதங்களில் 90 நாழிகை. 6 மாதங்களுக்குப் பிறகு 3 மாதங்களில் 1 நாள். அதற்குப் பிறகு உதகதானமும் ஸ்நானமும் என்று ஒரு பக்ஷம். 10 நாளைக்கு மேல் 3 பக்ஷம் வரையில் 3 நாள். அதன் பிறகு 3 மாதங்களில் 90 நாழிகை. 6 மாதங்களுக்குப் பிறகு வருஷம் வரையில் 1 நாள். அதற்குப் பிறகு உதகதானமும் ஸ்நானமும் என்றது வேறு பக்ஷம். சவ ஸமீபத்திலிருப்போன் தூரத்திலிருப்பவன் இவர்களைப்பற்றினவை இவ்விரண்டு பக்ஷங்கள். ஸ்மிருதிகள் இரண்டு பட்டால் பரோக்ஷத்தில் (தூரதேசத்தில்) அல்பகாலமுள்ள தீட்டு. ப்ரத்யக்ஷத்தில் அதிக காலமுள்ள தீட்டு என்று சதகம். 3 நாள், 90 நாழிகை, 1 நாள் தீட்டுள்ளவர்கள் தங்கள் காலத்திற்குப் பிறகு 10 நாள் முதலியதுக்கு நடுவில் கீழ்ச்சொன்ன தீட்டுக்குக் காரணமான மரணத்தைக் கேட்டால் முறையே 1 தினம் 1 காலம் (பகல் அல்லது ராத்திரி) ஸ்நானம் இவைகள் மாத்ரம். பிறப்பில் அதிக்ராந்தமான ஆசௌசமில்லை. தகப்பனுக்கு ஸ்நானம் தான். உபநயனம் ஆகாதவன் மரித்தால் அதிக்ராந்தமான ஆசௌசமில்லை. தகப்பன் முதலியோரைக்காட்டிலும் வேறுபட்டவர்கள் தேசாந்தரத்தில் மரித்தால் ஸ்நான மாத்திரத்தால் சுத்தி. தேசாந்தரம் என்பது எது என்ற விஷயத்தில் பல பக்ஷங்களிருக்கின்றன. அவைகளில் பிருஹஸ்பதியால் சொல்லப் பட்ட 60 யோஜனம் தூரத்திலிருப்பது தேசாந்தரம் என்ற

பக்ஷமே கலியில் பெரியோர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

26. பிரம்மசரியம் முதலிய வ்ரதத்திலிருப்பவன் விஷயம்.

ஆசாரியன், உபாத்தியாயன், தாய், தகப்பன், மாதாமஹன் மாதாமஹி, அம்மான், அம்மாமி, இவர்கட்கு பிரம்மசாரி பிரேத கிரியை செய்தால் அக்கிரியை செய்யும் வரையில் தீட்டு. அதன் பிறகு ஸ்நானத்தால் சுத்தி. தீட்டுள்ளவனுடன் வாசம், போஜனம் முதலியன செய்தால் 10 நாள் முதலிய தீட்டு. மறுபடி உபநயனம் செய்து கொள்ளவேண்டும். கீழ்ச் சொல்லப் பட்டவர்களைக் காட்டிலும் வேறு பட்டவர்களுக்கு சபிண்டீகரணத்தை முடிவாகக் கொண்ட பிரேதக் கிரியை செய்தால் மறுபடியும் உபநயனம் செய்வதால் சுத்தி. தீட்டின் நடுவில் கிருச்சிரம், பிராயச்சித்தம், பிரம்மசர்யம் முதலிய விரதம், முடிந்தால் மீதி நாள் தீட்டு. தீட்டுக்கு வெளிப்பட்டு அவை முடிந்தால் வருஷம் வரையில் அந்தந்தக் காலத்தில் விதிக்கப்பட்ட அதிக்கிராந்தாசௌசத்தையும் உதகதானத்தையும் செய்ய வேண்டும். வருஷத்திற்குப் பிறகு உதகதானம் செய்ய வேண்டும்.

27. தீட்டுடன் சேர்ந்ததீட்டுப் போவது.

ஜாதி, வயது, அவஸ்த்தை [வயோவஸ்தை] இவைகளை முன்னிட்டு எவனுக்கு எவ்வளவு காலம் தீட்டுச் சொல்லப்பட்டதோ அதன் நடுவில் அத்தீட்டிற்கு சமமாகவோ அதற்குக் குறைந்ததாகவோ இருக்கும் தீட்டிற்குக் காரணமான பிறப்

போ இறப்போ உண்டானல் முன் தீட்டில் பாக்கியுள்ள தின ங்களாலேயே சுத்தி. பிறகுண்டான பிறப்பு முதலியதின் கா ரணமாக தனித்தனியாகத் தீட்டுக் கார்க்க வேண்டியதில்லை. பிரஸவத்தீட்டில் ஷ தீட்டும், சாவுதீட்டில் ஷ தீட்டோ பிரஸவத்தீட்டோ வந்தால் முன் தீட்டு நாட்களாலேயே சுத்தி. 10 நாளைக் குள்பட்ட குழந்தை மரணத்தாலுண் டான தீட்டைக்காட்டிலும் வேறு சாவு தீட்டு பிரஸவத் தீட்டினல் போவதில்லை. பூர்ணமான தீட்டின் கடைசி தின த்தில் பூர்ணமான தீட்டு வந்தால் முன் தீட்டு நாட்களு க்குப்பிறகு 2 நாட்களால் சுத்தி. பூர்ணமான தீட்டின் கடைசி தினத்தின் கடைசி யாமத்திலோ அருணோதய த்திலோ பூர்ணமான தீட்டு வந்தால் 3 தினங்களால் சுத்தி. பூர்ணமான தீட்டின் கடைசி தினம் முதலியதில் பூர்ண மாயில்லாத தீட்டு வந்தால் முன் தீட்டின் பாக்கியினு லேயே சுத்தி. இவ்விஷயத்தில் 2 அல்லது 3 நாட்களுக்கு விதி கிடையாது. நீண்ட தீட்டின் நடுவில் வந்த அல்ப மான தீட்டிற்கு நீண்ட தீட்டினுலேயே சுத்தி. அல்ப மான தீட்டின் நடுவில் வந்த நீண்ட தீட்டிற்கு அல்பமான தீட்டால் ஒழிவில்லை என்று சதகவியாக்யானம் முதலி யன. அல்பமான முன் தீட்டு பிந்தின பூர்ணமான தீட் டின் பாதியைக் காட்டிலும் அதிக காலத்துடனிருந்தால் அப்போது முன் தீட்டின் மீதியினுலேயே சுத்தி என்று சந்திரிகை, ஸ்மிருதிரத்நம், மாதவீயம் முதலியன. அல் பமான சாவு தீட்டின் நடுவில் நீண்ட பிரஸவத்தீட்டு வந் தால் அல்பமான சாவுதீட்டாலேயே ஒழிவு. அதிக கால முள்ள பிரஸவத்தீட்டின் நடுவில் அல்பமான சாவு தீட்டு வந்தால் பிரஸவத்தீட்டினுலேயே ஒழிவு. தங்கள் தேசா

சாரப்படி வ்யவஸ்தை, என்று முக்தாபலம். பூர்ணமான முந்தின சாவுதீட்டின் கடைசி நாளிலோ கடைசி யாமத்திலோ அதே காலமுள்ள பிரஸவத்தீட்டு வந்தால் முறையே 2 அல்லது 3 நாள் அதிகமாகிறது. அதிகமாவதில்லை யென்று தர்மபிரதீபிகையில் சொல்லியிருப்பது பிராசீனமான பலபிரமாணங்கட்கும் பெரியோர்களின் ஆசாரத்திற்கும் விருத்தம். பிற்பட்ட மரணம் முதலியதால் வரும் தீட்டின் நடுவில் முந்தின மரணம் முதலியதால் ஏற்படும் அதிக்ராந்தமாயில்லாத தீட்டு வந்தால் முன் மரணம் முதலியதால் வந்த தீட்டின் காலத்தினுலேயே பிந்தின மரணம் முதலியதால் வந்த தீட்டிற்கு ஒழிவு. கீழ் கண்ட விஷயத்தில் அதிக்கிராந்தமான தீட்டு வந்தால் அதற்குப்பெரியதால் சிறியது போகும் என்ற நியாயப்படி பிந்தின மரணம் முதலியதால் வரும் தீட்டின் காலத்தாலேயே சுத்தி. தீட்டின் நடுவில் ஒரு தீட்டு வந்து அறியப்படாமலிருந்து தீட்டுக்கழிந்த பிறகு அறியப்பட்டால் தீட்டு அவச்யம் கார்க்க வேண்டும். முன் தீட்டு காத்ததால் அத்தீட்டு ஒழியாது. முன் தீட்டின் 9 தினத்திலுண்டான பிந்தின சாவு முதலியவை முன் தீட்டின் 10 வது தினத்திலறியப்பட்டாலும் பின் சாவு முதலியவையால் வரும் தீட்டின் நடுவில் மூன் சாவு முதலியவை தன் 10 வது தினத்தில் அறியப்பட்டாலும் 2 நாள் 3 நாள் அதிகமாகின்றன. க்ஞாதியின் தீட்டின் நடுவில் தாய் தகப்பன் மாண்டால் தன் காலத்தாலேயே சுத்தி. முன் தீட்டின் பாக்கியால் சுத்தி உண்டாவதில்லை. தாயின் மரணத்தால் ஏற்பட்ட தீட்டின் நடுவில் தகப்பன் மரித்தால் தகப்பன் மரணத்தால் உண்டாகும் தீட்டு பூர்ணம்.

தகப்பன் சாவு தீட்டின் நடுவில் தாய் இறந்தால் தகப்பன் தீட்டிற்குப் பிறகு 90 நாழிதீட்டு. பர்த்தா இறந்துபோன தினத்திலோ மறு நாளோ பார்யை அநுமரணம் செய்தால் ஒரே சமயத்தில் 2 தீட்டிற்கும் ஒழிவு. தீட்டு நடுவில் பிள்ளை பிறந்தால் பிரஸவித்தவள், தகப்பன், ஸம்ஸ்காரம் செய்தவன் இவர்களுக்கு தங்கள் தீட்டின் காலத்தாலேயே சுத்தி. முன் தீட்டின் மீதியால் சுத்தியில்லை. தாய் தகப்பன் தவிர பலபேர்களை தகனஞ் செய்தால் முன் தகனத்தினாலுண்டான தீட்டின் பாக்கியினாலேயே பின் தகனத்தினாலுண்டான தீட்டிற்கொழிவு. ஏகோத்திஷ்டம் அதனதன் 11-வது நாளில் தான். மற்றவர்களை தகிப்பதாலுண்டாகும் தீட்டின் நடுவில் தாய் தகப்பனை தகனம் செய்தால் பிள்ளைகளுக்கு தாய் தகப்பன் தீட்டு பூர்ணமாகவுண்டு. முன் தீட்டின் மீதியால் சுத்தியில்லை. 90 நாழி தீட்டுடையோன் க்ஞாதியில்லாதவனை தகனம் செய்தால் கர்த்தா கண்ணில் படாதபோது உதகதானம் செய்தால் 3 நாள் தீட்டு. 3 நாளைக்கு மேல் ஸஞ்சயனத்திற்கு முன் கர்த்தாவைப் பார்த்தால் தகனம் செய்பவனுக்கு தீட்டும் உதகதானமும் இல்லை. ஸஞ்சயனத்திற்குப் பிறகு கர்த்தாவைப் பார்த்தால் பிரேதான்னத்தை புஜித்தால் 10 நாள் தீட்டு. 10 வது நாளில் உதகதானமும் செய்யவேண்டும். தாய் தகப்பன் சாவு தீட்டின் நடுவில் பிள்ளை பிறந்தால் அக்குழந்தையின் தகப்பனுக்கு பிதாவின் சாவு தீட்டு நாட்களாலேயே சுத்தி. அக்குழந்தையின் தாய்க்குப் பிரஸவத்தீட்டினாலேயே சுத்தி.

178241

28. 10 நாளுக்குட்பட்ட குழந்தையின் மரணத்தைப் பற்றின விஷயம்.

10 நாளைக்குள், பிறந்து மரித்தாலும் மரித்து பிறந்தாலும் ஸபிண்டர்கட்கு மரண நிமித்தமாக ஸ்நானம் மாத்திரம் உண்டு. தாய் தகப்பன்களுக்கு, தொப்புள் அறுக்த பிறகு 10 நாளைக்குள் குழந்தை மரித்தால் பிரஸவத்தீட்டினால் சாவு தீட்டிற்கு ஒழிவு. பிரஸவத்தீட்டின் கடைசி தினத்தில் மரித்தால் 2 தினங்களாலும் கடைசியாமம் அருணோதயம் இவைகளில் மரித்தால் 3 தினங்களாலும் சுத்தி. தொப்புள் அறுப்பதன் முன் பிறந்த சிசு மரித்தால் தாய்க்குப்பிரஸவத்தீட்டு பூர்ணமாக உண்டு. தகப்பன் முதலிய ஸபிண்டர்கட்க்கு 3 நாள். தாய் முதலியோர் யாவர்க்கும் மரண நிமித்தமாக ஸ்நானமே. தொப்புள் அறுப்புக்குப் பின் பிறந்தவன் மரித்தாலும், இறந்து பிறந்தாலும், எல்லோருக்கும் பிரஸவத்தீட்டுப் பூர்ணம். 10 நாளுக்குட்பட்ட குழந்தையின் சாவில் சோதரர்களுக்குப் பூர்ணமான தீட்டு என்று சந்திரிகை, ஸ்ம்ருதிரத்னம், மாதவீயம். நாமகரணம் முதலே சோதரர்களுக்குத் தீட்டு என்று வேறு நிபந்தனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தேசாசாரப்படி வியவஸ்தை.

R34
N33

29. க்ஷேத்ரஜன் முதலியோரின் விஷயம்.

க்ஷேத்ரஜன், தத்தன், க்ருத்ரிமன், கூடோத்பன்னன் அபவித்தன், கானீனன், ஸஹோடன், பௌனர்பவன், ஸ்வயம்ஜாதன், சூத்ரன் என்கிற புத்திர பிரிதிநிதிகளின் பிறப்பிலும் உபநயனம் ஆனபிறகு அவர்களின் மரணத்தி

னும் பீஜி, க்ஷேத்ரி என்று சொல்லப்படும் பிதாக்கட்கு 3 நாள் தீட்டு. அவர்கள் ஜ்ஞாதிகளுக்கு 1 நாள். உபநயனம் ஆகாதபோது அவர்கள் மரித்தால் அந்த பிதாக்களுக்கு 3 நாள். அவர்கள் க்ஞாதிகளுக்கு ஸ்நானத்தால் சுத்தி. கீழ்ச் சொன்ன பிதாக்களிறந்தால் க்ஷேத்ரஜன் முதலிய புத்திர பிரதிநிதிகளுக்கு 3 நாள். க்ஷேத்ரஜாதி விஷயத்தில் 1 நாள் என்றும் 3 நாள் என்றும் பக்ஷங்கள் முறையே ஸமீபத்தில் இருப்போன் தேசாந்தரத்திலிருப்போன் இவர்களைப் பற்றினது. ஒரே தாயுடையவர்களும் வேறு பிதாக்களுள்ளவர்களுமான இருவர்களில் யாதாமொருவன் பிறக்கும் போது மற்றொருவனுக்கு 1 நாள் தீட்டு. யாதாமொருவன் இறந்தால் மற்றவனுக்கு 3 நாள் தீட்டு. உபநயனத்திற்குப் பிறகு கொடுக்கப்பட்ட 2 கோத்ர சம்பந்தமுள்ளவனிறந்தால் உண்டு பண்ணினவன், பெற்றுக் கொண்டவன் இவர்களுக்கு 3 நாள் தீட்டு. இவர்கள் ஞாதிகளுக்கு 1 நாள். இருவகையான பிதாக்களின் மரணத்தில் தத்தனுக்கு 3 நாள். இருவகையான ஞாதிகள் மரித்தால் 1 நாள். உபநயனத்திற்கு முன் கொடுக்கப்பட்டவனுக்கு ஜனக பிதாவின் கோத்ர சம்மந்தமில்லை.

30. ரஜஸ்வலையின் விஷயம்.

ரஜஸ்—ராகஜம், ரோகஜம், காலோத்பன்னம், திரவ்யஜம் என்று நான்கு வகையின. பிரஸவத்திற்கு முற்பட்டது ராகஜம். மிகவும் அதிகமான ரஜஸ் ரோகஜம். 21 நாள் முதலியதுக்கு பின்னுண்டான ரஜஸ் காலோத்பன்னம். சாப்பிடும் வஸ்து விசேஷத்தால் தாதுவின் நிலை மாறி ஒரு சமயம் உண்டாகும் ரஜஸ் திரவ்யஜம். ரோக

ஜத்தில் தீட்டுக்கிடையாது. தேவதை, பித்ருக்கள் இவர்களை உத்தேசித்த காரியத்தில் சமையல் முதலியதில் யோக்கியதையில்லை. ராகஜம், காலஜம் இவைகளில் ரஜஸ் உண்டானது முதல் 3 நாள் தீட்டு. திரவ்யஜமான ரஜஸ்ஸில் ரஜஸ் ஏற்பட்டது முதல் 12 தினங்கள் வரை மூத்திரத்தில் போல் சௌசம். 18 நாளைக்கு முன் ஸ்நானம். அதற்கு மேற்பட்டால் 3 நாள். ரஜஸ் அறியப்பட்டால் தான் அசுத்தி. ஸந்தேகமிருந்தால் ஸ்நானம். 4 வது நாளில் ஸ்நானத்தினால் சுத்தி. ஸங்கவகாலத்திற்கு மேல் ஸ்நானம். 5 வது முதலிய தினங்களில் ரஜஸ் ஒழிந்தால்கர்மாக்களை செய்வதில் யோக்கியதையுண்டு. ரஜஸ் உண்டானது முதல் 18 வது நாளுக்கு முன் எந்த ஸ்திரீக்கு ரஜஸ் அதிகமுண்டாகிறதோ அவளுக்கு அப்போது 3 நாள் தீட்டு. எவளுக்கு 20 நாளுக்குப்பிறகே பெரும்பாலும் ரஜஸ் உண்டாகிறதோ அந்த ஸ்திரீக்கு 18 வது நாள் ரஜஸ் உண்டானால் 1 நாள் தீட்டு. 19-வது நாளுண்டானால் 2 நாள். 20-வது நாளுண்டானால் 3 நாள். சாப்பிடும் போது ரஜஸ்வலையின் பேச்சை கேட்கக்கூடாது. சாப்பாட்டு நடுவில் ரஜஸ்வலையைப் பார்த்தால் ஸ்நானம் பண்ணி, "மானஸ்தோகே" என்ற ருக்கை ஜபிக்கவேண்டும். மற்ற சமயத்தில் பார்த்தால சூரியனைப்பார்ப்பதும் பேசினால் பிராம்மணனுடன் பேசுவதும் பிராயச்சித்தம்.

31. ச்ரோத்திரியன் முதலியோர் விஷயம்.

தன் வீட்டில் ச்ரோத்திரியன் மரித்தால் 3 நாள் தீட்டு. தன் கிராமத்தில் மரித்தால் 1 நாள். தன் வீட்டில் அச்ச்ரோத்திரியன் மரித்தால் 1 தினம். தன் கிராமத்தில் மரி

த்தால் தீட்டில்லை. ஒரு சாகையை அத்யயனம் செய்தோன் ச்ரோத்ரியன்.

32. தன் வீட்டில் புத்திரி பிரஸவிக்கும் விஷயம்.

தன் வீட்டில் பெண் பிரஸவித்தாலும் மரித்தாலும் தாய் தகப்பனுக்கு 3 நாள் தீட்டு. அப்பெண்ணின் கூடப்பிறந்தவனுக்கு 1 நாள். மற்றவர்களின் வீட்டில் பிரஸவித்தால் தீட்டில்லை. மற்றவர் வீட்டில் பிரஸவித்தாலும் அதற்கு வேண்டிய திரவியத்தைக் கொடுத்தால் தீட்டென்று சிலர். ஆசாரப்படி வியவஸ்தை. அம்மான் சிறியதகப்பன் பெரியதகப்பன் முதலியோர் வீட்டில் பிரஸவித்தால் ஷை பந்துக்களுக்கு 1 நாள் தீட்டு. பந்துக்களுக்கும் ப்ராதா முதலியோர்கட்கும் ஸ்திரீ மரித்தால் 90 நாழி அல்லது 1 தினம் தீட்டு. சம்பந்தமில்லாத ஸ்திரீ மற்றவர் வீட்டில் பிரஸவித்தால் அக்கிருஹம் முதலியவற்றிற்கு தீட்டில்லை. சம்பந்தமில்லாதவள் மரித்தால் சவம் வெளிக்கிளம்பின பிறகு அந்த வீட்டிற்கு தீட்டில்லை. அவ்வீட்டில் பிரேதக்கிரியை செய்தால் பாஷாணமிருக்கும் வரை வீட்டிற்குத் தீட்டு. தாய் தகப்பன் சமீபத்தில் மரித்தால் விவாஹமான பெண்ணுக்கு 3 நாள் தீட்டு.

33. பிறரையடைந்த பார்யை விஷயம்.

விவாஹம் செய்தவனைக் காட்டிலும் மற்றவனை அனுலோமமாகச் சேர்ந்த ஸ்திரீ சமீபத்தில் மரித்தால் விவாஹம் செய்தவனுக்கும் ஜார புருஷனுக்கும் 3 நாள் தீட்டு. தூர தேசத்தில் 1 நாள். பர்த்தா ஜாரன் இவர்களின் ஸபிண்டர்களுக்கு 1 நாள். தூர தேசத்தில் அவர்களுக்கு ஸ்நானம்.

அந்த பர்த்தாக்கள் மரித்தால் அவளுக்கு 3 நாள். தூர தேசத்தில் 1 நாள். பிரதிலோமமாக பிறரை அண்டினவளுடைய சாவில் தீட்டுக் கிடையாது. சமீபத்தில் அநுலோமமாக இரண்டு தரம் விவாஹம் செய்து கொள்பவளின் மரணத்தில் அந்த பர்த்தாக்களுக்கு 3 நாள். தூரதேசத்தில் 1 நாள். 2 பர்த்தாக்களின் ஸபிண்டர்களுக்கு 1 நாள் தூர தேசத்தில் ஸ்நானம். அந்த பர்த்தாக்கள் மரித்தால் அவளுக்கு 3 நாள். தூர தேசத்தில் 1 நாள்.

34. தௌகித்ரன் முதலியோரின் விஷயம்.

உபநயனமான தௌகித்ரன் சமீபத்தில் மரித்தால் மாதாமஹன், மாதாமஹி இவர்களுக்கு 3 நாள் தீட்டு. தூர தேசத்தில் 90 நாழிகை. உபநயனமான மருமான் மரித்தால் அம்மான், அம்மாமி, சிறுதாயார், பெரியதாயார் இவர்களுக்கு 3 நாள். உபநயனம் ஆகாதபோனால் 90 நாழிகை. உபநயனமாகாத அம்மான் விவாஹமாகாத சிறியதாயார் பெரிய தயாார் இவர்களின் மரணத்தில் மருமானுக்கு ஸ்நானத்தால் சுத்தி.

35. மாமியார் முதலியோரின் விஷயம்.

மாமியார், மாமனார், ஸபிண்டனல்லாத குரு, அவன் பார்யை அவன் பிள்ளை, பூர்வஜாஷ்டன், ஸ்வயம் விருதன் இவ்வித மான ரித்விக், வம்ச கிரமமாக யஜிப்பிக்கப்பட்டவன், குரு குலவாசியான சிஷ்யன் இவர்கள் மரணத்தில் அவர்களுக்கெதிரான மருமகன், சிஷ்யன், யஜிப்பிக்கப்பட்டவன், ரித்விச், குரு இவர்களுக்கு 3 நாள் தீட்டு. ஆசார்யனுக்கு

உத்தரக்கிரியை செய்தால் சிஷ்யனுக்கு 10 நாள் தீட்டு. குருவின் உபகாரமற்ற பார்யை புதல்வன் இவர்களின் மரணத்தில் 1 தினம். தற்செயலாயேற்பட்ட ரித்விக், யாஜ்யன் இவர்களின் மரணத்தில் ஒருவருக்கொருவர் ஸ்நானத்தால் சுத்தி. பத்னி இறந்த பிறகு மாமனார் மாமியார் இறந்தால் 1 நாள். சந்ததி இருந்தால் 3 நாள். முன் சொன்ன விஷயத்தில் 90 நாழிகை ஸ்நானம் இவைகளின் விதி, தேசாந்தரத்திலிருப்பவனைபற்றியதென விக்ஞானேஸ்வரர். உபகாரத்தின் ஏற்றக்குறைவை முன்னிட்டு இதில் வ்யவஸ்தை என்று ஸ்மிருதிசந்திரிகை.

36. சிறியதாயார் பெரியதாயார் முதலியோரின் விஷயம்.

விவாஹமான சிறுதாயார், பெரியதாயார், உபநயனமான அம்மான், அம்மாமி, மாதாமஹன், மாதாமஹி, இவர்களின் மரணத்தில் மருமானுக்கும் தௌஹித்ரனுக்கும் 3 நாள். தூரதேசத்தில் 90 நாழிகை. தௌஹித்ரன் மாதாமஹன் முதலியோருக்கு உத்தரக்கிரியை செய்தால் 10 நாள். கீழ்ச் சொன்னவர்களின் மரணத்தில் ஸ்நானத்தால் சுத்தியெனச்சொன்னது தேசாந்தரத்திலிருப்பவனைப் பற்றியது.

37. 90 நாழி தீட்டு.

விவாஹமான ஸ்திரீ இறந்தால் சிறியதாயார் பெரியதாயார் அவள் புத்திரி, புத்திரன், தாயின் சகோதரிகளின் பிள்ளையின் மனைவி, அம்மான், அம்மாமி, அவர்கள் பெண், பிள்ளை, அம்மாஞ்சியின் பார்யை, ஸோதரி, அவள் பெண், பிள்ளை, ஸோதரியின் பிள்ளையின் பார்யை, ஸோதரன், அவன் பார்யை, அவன் பெண், பிள்ளை, ஸோதரன் பிள்ளையின் பார்யை,

அத்தை, அவள் பெண், பிள்ளை, அத்தானது பார்யை, பிள்ளையின் பெண், பிதாமஹன், பிதாமஹி, மாதாமஹன், மாதாமஹி, பெண்ணினது பெண், தகப்பனின் சகோதரன், அவன் பார்யை, அவன் பெண், பிள்ளை, அவன் பிள்ளையின் பார்யை, தூரதேசத்திலிருக்கும் பெண், பெண்ணின் பிள்ளை, அவன் பார்யை, தாய் தகப்பன் என்று 36 ஜனங்கள் 90 நாழி தீட்டுள்ளவர்கள். புருஷனின் மரணத்தில் தாயின் சகோதரி, அவள் பெண், பிள்ளை, தாயின் சகோதரி பிள்ளையின் பார்யை, அத்தை, அவள் பெண், பிள்ளை, அத்தான் மனைவி, ஸோதரி, பிள்ளையின் பெண், உடன் பிறந்தான் பெண், ஸோதரியின் பெண், தகப்பன் ஸகோதரன் பெண், பெண்ணினது பெண், அம்மான் பெண், பிள்ளை, அம்மாஞ்சியின் பார்யை, தூரதேசத்திலிருக்கும் பெண், பெண்ணின் பிள்ளை, அவன் பார்யை, ஸோதரியின் பிள்ளை, அவன் பார்யை, உபநயனமாகாதவன் விஷயத்தில் மாதாமஹன், மாதாமஹி, தாயின் ஸகோதரி, அம்மான், அம்மாமி என்ற 26 ஜனங்கட்கும் 90 நாழி தீட்டு. தாய் தகப்பன் வழியாக எந்த புருஷனிடத்தில் (அம்மாஞ்சி அத்தான் முதலியோர்) 90 நாழி சொல்லப்பட்டதோ அவர்களின் பார்யை மரித்தால் 90 நாழி தீட்டில்லை. பந்துவானபடியால் ஸ்நானம் மாத்திரம். விவாஹமான ஸ்திரீயின் மரணத்தில் பிதாமஹன் பிராதாவுக்கும் அவன் பார்யைக்கும் இவர்கள் மரணத்தில் அந்த ஸ்திரீக்கும் 90 நாழி தீட்டுண்டு. இது தோழப்பருக்கும் வைத்யநாத தீக்ஷிதர்க்கும் சம்மதம்.

38. வேறு தகப்பன் முதலியோர் விஷயம்.

ஜாரனுன தகப்பன், அவன் பார்யை, அவன் தாய், தகப்பன், அவன் பார்யையின் தாய், தகப்பன், அவன் சஹோதரன், சஹோதரி, அவன் பார்யையின் சஹோதரன், சஹோதரி, அவன் பெண், பிள்ளை, அவர்களின் பிள்ளைகள், பெண்கள், அவர்கட்கு எதிர்மறையான உறவினர்களுக்கும் ஒருவருக்கொருவர் 1 தினம் தீட்டு. ஸபத்னீ மாதா, பின்னுேதாரனுன சிறிய தகப்பன், அல்லது பெரிய தகப்பன், ஸபத்னீ மாதாவின் தாய் தகப்பன், அவளுடைய உடன் பிறந்தோன், உடன் பிறந்தவள், ஸபத்னீ மாதாவின் பெண், பிள்ளை, அவர்களின் பெண்கள், பிள்ளைகள், அவர்கட்கு எதிர்மறையான விவாஹம் செய்யப்பட்ட ஸ்திரீகளும் மரணத்தில் 1 தினம் தீட்டுள்ளவர்கள். பின்ன மாதுஸ்வஸு: பின்ன பிதுஸ்வஸு: என்கிற இடத்தில் தாயின் ஸோதரியின் ஸபத்நிக்கு, அத்தையின் ஸபத்நிக்கு என்று முறையே அர்த்தம் செய்து கொண்டு சிலர் அவர்களுக்கு திரிசௌசம் சொல்லுகின்றுர்கள்.

39. மூன்று நாள் முதலிய தீட்டின் வியவஸ்தை.

சமானுேதகன், யோனி சம்பந்தமுள்ள பந்து, சகோத்ரன், இவர்கள் விஷயத்தில் விதிக்கப்படும் 3 நாள் 90 நாழி, 1 நாள் தீட்டு, உபநயனத்திற்கு பிறகு இறந்து போனுல் தான். உபநயனத்திற்கு முன் மரித்தால் ஸ்நானத்தால் சுத்தி. ஸ்திரீகளுக்கு விவாஹமே உபநயனம்.

40. சம்மந்தம் தெரிந்த பந்துவின் மரணவிஷயம்.

தாயின் யோனி சம்மந்தமுள்ளவரிடமிருந்தும், பிதாவிலிரு

ந்து 7 தலைமுறை வரையிலும் எவ்வளவு வரையில் சம்ப ந்தம் அறியப்படுகிறதோ அதுவரையில் அவர்களின் மரணத்தில் ஸ்நானம். வருஷம் நிறம்பாத அஸபிண்டனுன குழந்தையின் மரணத்தில் ஸ்நானமில்லை.

41. ஸப்ரம்மசாரி முதலியோரின் விஷயம்.

கூட வேதத்தின் ஒரு பாகத்தை அத்யயனம் செய்தவனும் ஒரு குருவினுலேயே உபநயனம் செய்யப்பட்டவனும் ஸப்ரம்மசாரீ, வேதத்தின் ஒரு பாகத்தையோ, வேதத்தின் அங்கத்தையோ அத்யயனம் பண்ணிவைத்தவன் உபாத்யாயன், தோழன், மைத்துனன் இவர்களின் மரணத்தில் பிரதியோகிகளுக்கு 1 தினம் தீட்டு. மண்டலத்திற்கு அதிபதி சமீபத்தில் மரித்தால் 1 தினம். தூரதேசத்தில் 1 காலம் (பகல் அல்லது இராத்திரி). வேதத்தில் எல்லா பாகத்தையும் சேர்ந்து அத்யயனம் செய்தவன் சஹாத்யாயீ. அவனிறந்தால் அவ்விதமானவனுக்கு 90 நாழி. மறைவில் (தூர தேசத்தில்) ஸ்நானம். மஹாமண்டலத்தின் அதிபதி மரித்தால் 1 நாள். தன் தேசாதிபதி, கிராமாதிபதி, குலபதி (பதினுயிரம் ரிஷிகளுக்கு குரு) தபஸ் செய்பவன், இவர்களின் மரணத்தில் 1 காலம். பிரதானுசாரியனைக்காட்டிலும் வேறுபட்டவரும் சாஸ்திரம் மந்திரம் இவைகளை உபதேசித்தவருமான குருக்களின் மரணத்தில் 1 தினம். தூரதேசத்தில் ச்ரோத்திரியனுன சிஷ்யன் மரித்தால் 1 காலம்.

42. ஸத்தியச்சௌச விஷயம்.

ஸ்நானத்தை முடிவாகக்கொண்ட தீட்டே ஸத்திய

ச்சௌசமென்று சொல்லப்படுகிறது. மாமனார், மாமியார், அவர்களின் பிள்ளை, யாகம் செய்விக்கப்படுபவன், குரு புத்ரன் தற்செயலாய் ஏற்பட்ட ரித்விக், உபாத்யாயர் இவர்கட்கு மாப்பிள்ளை, தங்கை அல்லது தமக்கையின் புருஷன் ரித்விக், சிஷ்யன், யாகம் செய்விக்கப்படுபவன் இவர்கள் மரணத்தில் ஸ்நானமே. தூரதேசத்தில் தோழன், மைத்துனன், இவர்கள் மரணத்தில் தேசாந்தரத்தில் உபநயனம் செய்யப்படாத தௌஹித்ரன், மருமான் இவர்களின் மரணத்திலும் ஸ்நானமே. உபாத்யாயன் சிஷ்யனின் பிரேதத்தைப்பின் தொடர்ந்தால் 1 காலம்.

43. ராஜ்யத்தின் குழப்பம் முதலிய விஷயம்.

ராஜ்யக்குழப்பம், பஞ்சம், வியாதி முதலிய ஆபத்தில் அதை விலக்கச் செய்யப்படும் தானங்களிலும், வீட்டிற்கு தாகம் முதலியது, மஹோத்பாதம், தன் தேசத்தை விடுதல், தேசாந்தரத்தை யடைதல், அதே க்ஷணத்தில் மரணத்தை விளைவிக்கக்கூடிய குளிர், காற்று முதலிய தொந்திரவு, தேசத்தின் பிளப்பு முதலியவையிலும் அதை ஒழிக்கக்கூடிய தானங்களிலும், வைச்யர்கட்கு, கோவுக்கு மங்களமான கார்யங்களிலும், கிருஷி செய்யவேண்டிய காலம் கடந்துபோகும் போதும் ஸ்நானமே. அரசன் அல்லது அவனது வேலைக்காரன், குரு, மாடு, பிராம்மணன், ஸ்திரீ, பூமி, இதன் காரணமாக யுத்தத்தில் ஆயுதத்தால் அடிக்கப்பட்டால் ஸ்நானமே. தகனம் முதல் ஸபிண்டீகரணம் வரையிலுள்ள கிரியைகளுமுண்டு. மரணத்தில் ஆசையில்லாதவனும் அரசன் சிக்ஷையில் பயம் முதலியதால் யுத்தஸ்த

லத்தை அடைந்தவனுமான புருஷனிறந்தால் அச்சவம் கண்ணில் பட்டது முதல் கொளுத்தும் வரை தீட்டு. வேறு காலத்தில் உத்தரக்கிரியை செய்யவேணும். குருவுக்காகப் பிராணனை விட்டவன் விஷயத்தில் ஸ்நானமே. உத்தரக்கிரியையுமுண்டு. யுத்தத்தில் அடிபட்டவன் வேறு காலத்தில் மரித்தால் அவனுறவினர்க்கு 1 நாள்.

44. துர்மரண விஷயம்.

கொம்புள்ள பசு முதலியவை, திருடன், பஞ்சமன், மின்னல், ஆயுதம், விஷம், தூக்கிடுதல், கத்தி, வத்ஸநாபம் என்ற விஷம், நெருப்பு, நீர், விழுந்த இடத்தில் மரிக்கக்கடவோம் என்ற எண்ணத்துடன் செய்யப்படும் மஹாபிரஸ்தானம், சாப்பாடில்லாமை முதலியவற்றால் துர்மரணம் ஏற்படுகிறது. இந்த இடத்தில் கொம்புள்ள பிராணி திருடன் முதலியோரின் தொந்தரவு இருக்கிறதென்று தெரிந்து போனவன், கர்வம் முதலியதால் சண்டாளன் முதலியோரைக்கொல்ல முயற்சித்து அவர்களாலோ, கர்வத்தால் புலி முதலியவைகளைப்பிடிக்க முயற்சித்து அவைகளாலோ, ஜன நெருக்கத்தாலோ கொல்லப்பட்டவன் இவர்களின் சாவில் பிரேதம் கண்ணுக்குப்புலப்பட்ட பிறகு தகனம் செய்கிற வரையில் தீட்டு. மந்திரத்துடன் கிரியை பண்ணக்கூடாது. புத்தியுடன் ப்ரவிருத்தித்தபோது அரசன், மாடு, பிராம்மணன் இவர்களால் கொல்லப்பட்டவன், தாஸியை வைத்துக்கொண்டவனும், சூத்ரான்னத்தை உண்ணும் பிராம்மணன், பாபத்தை செய்பவன், தன் தொழிலைவிட்ட பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன், நாஸ்தி

கன், தாய், தகப்பன், பெண்டாட்டி, தான் இவர்களை ஏமாற்றுபவன், கடன் தொந்தரவுள்ளவன், கபடத்துடனிருப்பவன், இவர்களின் மரணத்தில் கண்ணில் புலப்பட்டு சாம்பலாகும் வரை தீட்டு. அறியாமல் துர்மரணத்தில் தாமதமின்றி உத்ரக்கிரியையும் தீட்டையும் அனுஷ்டிக்கவேணும். சாஸ்திரீயமான பிராயோபவேசம் முதலியதாலுண்டாகும் மரணத்தில் 3 நாள். உடனே உத்தரக்கிரியையும் செய்யவேணும். தேசாந்திரத்தில் பர்த்தா மரித்தபோது எந்த ஸ்திரீ தீயில் விழுகிறாளோ எவன் பகவானது காரியத்திற்காகவோ, பிராயச்சித்தவிதியாலோ சரீரத்தை விடுகிறானோ அவ்விஷயத்தில் 3 நாள் தீட்டு. தாமதமில்லாமல் உத்தரக்கிரியை முதலியவை செய்யவேணும். செய்யவேண்டிய காலத்தில் தானம், ஸ்நானம், பிதிருக்கள் தெய்வம் இவர்களின் பூஜை இவைகள் இல்லாதவனும், லிங்கத்தை அறுத்துக்கொண்டவனும் ஷண்டன், வேதத்தைவிட்டவனும் தன் வர்ணத்தில் வெறுப்பு உள்ளவனும், இளப்பமான வேலையிலிருப்பவனும் பாஷண்டன், தன் வர்ணம் ஆச்சிரமம் இவைகளுக்குரிய ஆசாரத்திலிருந்து நழுவினவனும் அரசனால் திருட்டின் காரணமாக சிக்ஷிக்கப்பட்டவனும் பிறர் பார்யையை அபகரிக்கும்போது அவள் பர்த்தாவால் கொல்லப்பட்டவனும், நெருப்பு, விஷம், ஆயுதம், தூக்குப்போட்டுக்கொள்ளுதல், ஜலத்தில் விழுவது, மலையிலிருந்து விழுதல் முதலிய மரணத்தை விளைவிக்கக்கூடிய வியாபாரத்தைச்செய்பவனும் நபும்ஸகன், பிராம்மண சாபத்தால் கெட்டுப்போனவனும் ஸுராபானம் முதலிய மகாபாதகத்தைச்செய்பவனும் பதிதன், சந்நியாசம் செய்துகொண்டு தன் தர்மத்தை விட்டவன் பிரவ்விரஜ்யாவாசி,

பயனின்றி உண்டானவன் மோகஜன், யோக்யதையிருக்கும்போது கார்ஹஸ்த்யம் முதலிய ஆச்ரமத்தைக்கைப்பற்றாதவன் அநாச்ரமீ, திருடன், சர்ப்பம், பர்த்தா, தான், இவர்களைக் கொல்லும் கெட்டஸ்திரீகள், இப்பேர்ப்பட்ட ஸ்திரீ புருஷர்களின் மரணத்தில் கண்ணுக்கு புலப்பட்டு சாம்பலாகும் வரை தீட்டு. உதககானம் முதலியவை செய்யக்கூடாது. அப்போது மந்திரமில்லாமல் தகனம் செய்யவேணும். பிறகு மந்திரத்துடன் தகனம் முதலியவை செய்யவேணும். முன் சொல்லப்பட்டவர்களின் விஷயத்தில் கண்ஜலம் விடுதல், பிரேதம் வகித்தல், கொளுத்தல் கயிறறுத்தல், ஸ்நானம் இவை முதலியவற்றை புத்தியுடன் செய்பவனுக்கு, தப்த கிருச்ரமோ, ஸாந்தபனமோ பிராயச்சித்தம். அறியாமல் செய்பவனுக்கு 1 தினம் சாப்பாடு கூடாது. மலையிலிருந்து விழுதல் நெருப்பில் விழுதல் முதலிய சாஸ்திரத்தால் விதிக்கப்பட்ட மரணம், பிராயச்சித்த விதியால் ஏற்பட்ட மரணமும் கலியில் மறுக்கப்பட்டிருக்கிறது.

45. துர்மரணத்தில் கர்மா செய்யவேண்டிய காலம்.

துர்மரணத்தில் வர்ஷத்தினுடையவோ 6 மாதத்தினுடையவோ, 3 மாதங்களுடையவோ, 3 பக்ஷங்களுடையவோ முடிவிலோ, உடனேயோ, மேலே சொல்லப்போகும் பிராயச்சித்தத்தையும் நாராயணபலியையும் செய்து 3 நாளில் கிரியை செய்யவேணும். அவ்விஷயத்தில் தீட்டு 3 நாள். வருஷத்தின் முடிவில் பிராஜாபத்தியம், அதிகிருச்ரம், 3 தப்தகிருச்ரங்கள் சாந்திராயணமும் பிராயச்சித்தமாம். பிராஜாபத்தியத்திற்கு பிரதிநிதி 1 பசு. அதிகி

ருச்சிரத்திற்கு 3 பசுக்கள். தப்தகிருச்சிரத்திற்கு 3 பசுக்கள். தரித்திரனுயிருந்தால் சாந்திராயணத்திற்குப்பிரதிநிதி 3 பசுக்கள். பணக்காரனுயிருந்தால் 8 பசுக்கள். ஆக 16 அல்லது 21 பசுக்கள் பிரதிநிதிகள். 6 மாதமானுல் 2 மடங்கு. 3 மாதமானுல் 3 மடங்கு. 3பக்ஷங்களானுல் 4 மடங்கு. உடனே 5 மடங்கும் பிராயச்சித்தம். அறியாமல் துர்மரணம் நேருமானுல் கிருச்சிரம், அதிகிருச்சிரம் சாந்திராயணம் ஸாந்தபனம் இவைகள் பிராயச்சித்தம். கடைசியில் பசுதானம் செய்து உடனே கிரியை நடத்தவேணும். ஸாந்தபனத்திற்கு 2 பசுக்கள் பிரதிநிதி. பாக்கி அறிந்து செய்யும் துர்மரணத்தில் போல்.

46. பிரம்மசாரி முதலியோரின் தீட்டு.

பிரம்மசாரி கிருஹஸ்தன் இவர்கள் மரித்தால் கிருஹஸ்தனுக்கு தன் ஜாதிக்குச்சொல்லப்பட்ட தீட்டு. வானப்பிரஸ்தன் சந்நியாசி இவர்கள் மரித்தால் ஸ்நானமே. பிரம்மசாரி, சந்நியாசி, வானப்பிரஸ்தன் இவர்களில் எவரேனும் மரித்தாலும் கிரஹஸ்தன் மரித்தாலும் அவர்களில் ஒவ்வொருவனுக்கும் ஸ்நானமே. பிரம்மவித்துக்களுக்கு தீட்டுக்குறைவு கலியில் மறுக்கப்பட்டது.

47. கிருச்ரம் முதலிய விஷயம்.

பிராஜாபத்யம் முதலிய கிருச்ரம் தேவதையின் உத்ஸவம் தீர்த்தயாத்ரை, ச்ராத்தம், நித்யதானம், தபஸ், யாகம், இவைகள் ஆரம்பிக்கப்பட்டபோது அதை நடத்துகிறவர்கட்கு தீட்டு வந்தால் ஸ்நானமே. மதுபர்க்கம் வாங்கி

க்கொண்ட ருத்விக்குக்களுக்கும் யாகத்தில் ஸங்கல்பம் பண்ணிக்கொண்ட யஜமானனுக்கும் ஸ்நானமே. தேவதையின் பிரதிஷ்டை, விவாஹம், பெயரிடுவது, அன்னபிராசனம், சௌளம், உபநயனம், வேதபாராயணம் முதலிய வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் ஸ்நானமே. நாந்திக்குப்பிறகு விவாஹத்திலும் லாஜஹோமம் முதலிய வியாபாரங்களிலும் ஸ்நானமே. சிராத்தத்தில் குதபகாலத்தில் ஸங்கல்பம் பண்ணின பிறகு கர்த்தா "பவதா க்ஷண: கர்த்தவ்ய:" என்று வரித்த பிறகு "ஓம் ததா" என்று ஒப்புக்கொண்டவனுக்கு ஸ்நானமே. கீழ் சொல்லப்பட்ட கிருச்ரம் முதலியது முடிந்த பிறகு தீட்டு இருந்தால் பாக்கி நாட்களே. கீழ்ச்சொல்லப்பட்ட கர்மாவின் நடுவில் தீட்டு முடிந்துபோனால் கர்மம் முடிந்த பிறகு அதிக்கிராந்தாசௌசம். யாகம், பிரதிஷ்டை, விவாஹம் இவைகளுக்கு வேண்டிய திரவ்யம் சேகரித்த பிறகு இவைகளை ஆரம்பிக்குமுன் தீட்டு வந்தால் அவ்வருஷத்தில் பிரமாணத்தில் அவைகட்குச்சொல்லப்பட்ட காலம் சம்பவிக்காதுபோனால் கர்த்தாவுக்கு ஸ்நானமே. விவாஹத்தில் பாலிகை முளைத்த பிறகு தாய் தகப்பன் மரித்தால் அக்காலத்தில் சேஷஹோமம் வரை பண்ணி தகனம் முதலியன செய்யவேண்டும். அந்த சேஷஹோமத்தின் நடுவில் அந்த வதூவரர்களுள் யாதாவொருவர் மரித்தால் அந்த சேஷஹோமத்தைச்செய்து தகனம் முதலியன செய்ய வேண்டும். யாகத்தில் தீக்ஷை செய்துகொள்பவன் அந்த தீக்ஷையின் நடுவில் தாய் தகப்பன் மரித்தால் தகனம் செய்து யாகசாலைக்கு வந்து யாகத்தில் பாக்கிக்கிரியையை அனுஷ்டிக்க வேண்டும். சிராத்தம், சௌளம் முதலிய உத்ஸவம், யாகம், 1000 பேர்களுக்கு

சாதம் போடல், கிருச்ரம் இவைகளில் விதிக்கப்பட்ட சாப் பாட்டில் சமயலுக்குப்பிறகு போஜனம் முடிவதற்குள் தீட்டு வந்தால் தீட்டில்லாதவர்கள் பரிமாற வேண்டும். சாப் பிடும் வரையில் தீட்டில்லை. ஆசமனம் முதலியன வேறு கிருஹத்தின் தீர்த்தத்தாலேயே செய்யவேணும். தீட்டுக்கா ரன் பாண்டம் முதலிய வஸ்துக்களைத்தொடக்கூடாது. தீட்டுக்காரன் பார்க்கும் போது உண்ணக்கூடாது.

48. முன் ஸங்கல்பிக்கப்பட்ட திரவ்ய விஷயம்.

யாகம் உத்ஸவம் முதலியதில் இந்த திரவ்யம் தேவதை க்காக, இது பிதிருக்களுக்காக, இது பிராம்மணர்களுக்காக என்று தீட்டு வருவதற்கு முன் ஏற்படுத்தப்பட்ட திரவ்ய த்தை கொடுப்பதிலும் பெற்றுக்கொள்வதிலும் குற்றமில்லை.

49. கிரஹணம் முதலிய விஷயம்.

கிரஹணத்தில் ஸ்நானம் சிராத்தம் முதலியதுகளிலும் பிள்ளை பிறப்பிலும் பிறந்த பிறகு செய்யவேண்டிய கர்மா வாகிற ஜாதகர்மாவிலும் ஸ்நானமே. பலத்தையுத்தேசித்து உபவாஸம் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் தானம் பூஜை இவை களில்லாமல் அந்த விரதத்தை முடிக்கவேண்டும். பலத்திற் காக இல்லாத உபவாஸத்தை நன்கு செய்யவேண்டும். விவாஹத்தில் பிரதானமான ஹோமத்திற்கு முன்பு கன்னி கைக்கு ரஜஸ் ஏற்பட்டால் காயத்ரியால் சுத்தமான ஜலத் தால் "யஜூ: பவித்ரம்'' என்ற மந்த்ரத்தாலும் "பவமா ன: ஸூவர்ஜன:" என்ற அனுவாகத்தாலும் கன்னிகைக்கு ஸ்நானம் செய்துவைத்து பூர்ணாஹூதியினாலும் மிந்தாபத

முள்ள மந்திரங்களாலும் ஹோமம் செய்து பிராமணனிடம் அனுமதிபெற்று வேறு வஸ்திரம் உடுத்திக்கொண்ட அந்தக் கன்னிகையுடன் பாக்கி கார்யத்தை முடிக்கவேண்டும். ப்ரதானஹோமத்திற்குப்பிறகு ரஜஸ் ஏற்பட்டால் 3 நாளைக்கு மேல் பாக்கி காரியத்தை முடிக்கவேண்டும். தாஸீ, தாஸன் அரசன், மந்திரி, வைத்தியன், தொழிலாளிகள், சித்திரம் எழுதுவது, முதலிய கலைகளில் ஸமர்த்தன், அரசனது வேலைக்காரன் இவர்கட்கு தன் தன் வேலை செய்வதில் ஸ்நானமே. யுத்தத்திற்காக பிரயாணத்தில் செய்யவேண்டிய ஹோமம் செய்யும்போதும், அரிஷ்டசாந்திக்காக செய்யும் கர்மாவிலும் அரசனுக்கு ஸ்நானமே.

50. தீட்டில் ஆகாராதி விஷயம்.

சாவு தீட்டில் காரம் உப்பு இது இல்லாத அன்னத்தை புஜிப்பவர்களாயும் தனியாகத்தரையில் படுத்துக்கொண்டும் யாசிக்காமலடையப்பட்டோ விலைக்கு வாங்கப்பட்டோ இருக்கிற அன்னத்தை சாப்பிடுகிறவர்களாயும், கீழ்ச்சொல்லப்பட்ட அன்னமில்லாமல் போனால் சாப்பிடாதவர்களாயும் ஸ்த்ரீஸங்கமமில்லாதவர்களாயும், தீட்டுக்காக ஏற்பட்ட பாய்களில் உட்கார்ந்துகொண்டுமிருக்கவேண்டும்.

51. தீட்டுள்ளோன் விலக்கவேண்டிய விஷயம்.

பகவானை ஸேவித்தல், அவரது ஆலயத்தில் பிரவேசித்தல், ப்ரதக்ஷிணம் செய்தல், பகவத்பக்தனை ஸேவித்தல், அபிவாதனம் பிரத்யபிவாதனம் செய்தல், முதலியன கூடாது,

52. ப்ரேதத்தைக்கொண்டுபோகும் முதலிய விஷயங்கள்.

பிரேதத்திற்கு தலையில் சூட்டும் புஷ்பம், சந்தனம், வஸ்திரம், உடம்பில் புஷ்பம், முதலியதால் அலங்காரம் செ

ய்வது, வஹித்தல், தகித்தல் இவைகள் செய்யப்படுமேயா னால் ஸமானோதகனுக்கு 10 நாள். உபநயனமாகாத ஸபிண் டசவத்தைக்கொண்டுபோனால் 10 நாள். பந்துக்களின் சவ த்தைக்கொண்டு போனால் 3 நாள். கூலியில்லாமல் வேறு ஜா தியின் சவத்தைத்தூக்கினால் சவத்தின் ஜாதிக்குச்சொல்ல ப்பட்ட தீட்டு. அஸபிண்ட சவத்திற்கு அலங்காரம் வஹ னம் முதலியன செய்தால் பாக்கி நாழிகை ஊருக்கு வெளி யிலிருந்து க்ருச்ரம், உபவாஸம், பஞ்சகவ்யத்தை சாப்பிடுதல் இவைகளைச்செய்யவேணும். கிராமத்தில் வசித்தால் தினத் தாலும், பிரேதகிருஹவாஸத்தில் 3 நாட்களாலும், பிரேதா ன்னத்தைப்புஜித்தால் 10 நாட்களாலும் சுத்தி. ஸபிண்ட ப்ரேதத்தைத் தூக்கினால் கிராமத்திற்கு வெளியே வஸித்தல் பஞ்சகவ்யம் சாப்பிடுதல் கிருச்ரம் உபவாஸம் முதலியதில் லை. அனாதைகளான பிராம்மணன், க்ஷத்திரியன், வைச்யன் இவர்களைத்தூக்கினாலும் ஸந்நியாஸி, பிரம்மோபாஸனப் செய்தவர் இவர்களைத்தூக்கினாலும் ஸ்நாநமே. வஹிக்கப் டுவதாயும் அலங்கரிக்கப்பட்டுமிருக்கிற சவத்தைப்பார்த்தால் அக்காலத்தில் உடுத்தியிருக்கும் துணியுடன் ஸ்நாநம் செ யவேண்டும். தற்செயலாய் மார்க்கத்திலிருக்கும் பிரேதத்தை ப்பார்த்தால் ஆசமனம் செய்யவேண்டும். ஒரு பலத்தையுத் தேசித்து ஸபிண்டனல்லாத சவத்தைத்தூக்கினால் அந்த ஜாதிக்குச்சொல்லப்பட்ட தீட்டைக்காட்டிலும் 2 மடங்கு தீட்டு. ஸபிண்டசவத்தை பிரயோஜனத்தையுத்தேசித்து தூக்கினால் தன் ஜாதிக்குச் சொல்லப்பட்ட தீட்டு. ரஜஸ்வலை பிரஸவித்து 10 நாளாகாதவள், கர்ப்பிணி, இவர்களின் சவப் நாளான சவம், இவைகளைத்தூக்கினால் பஞ்சகவ்யம் சாப் பிடுதல், பசுவுக்குப்புல் கொடுத்தல், காயத்ரீஜபம், அக்ன

யைத்தொடுவது, நெய் சாப்பிடுவது, புண்யாகவாசனம் செய்வது, பூணூல் போட்டுக்கொள்ளுதல் இவைகளால் சுத்தி.

53. சவத்திற்குப்பின் போகும் விஷயம்.

சவத்திற்குப்பின் போனாலும் அழுதாலும் அந்த தினத்தில், ஜபம், ஹோமம், சிராத்தம், பகவானுடைய ஆராதனம் முதலியதுக்கு யோக்யதையில்லை. ச்மசானத்திற்குச்சென்றாலும் ஆராதனத்திற்குயோக்யதையில்லை. பிரம்மசாரிக்கு, ஆசார்யன், உபாத்யாயன், தாய், தகப்பன், மாதாமஹன் அம்மான், மாதாமஹீ, அம்மாமி, இவர்களைத்தூக்குவது முதலியதுகளில் குற்றமில்லை. கீழ்ச்சொல்லப்பட்டவர்களைக்காட்டிலும் மற்றவர்களைத்தூக்குவது முதலியவைகளில் மறுபடியும் உபநயனம் செய்யவேணும். கர்ப்பிணியின் பர்த்தாவாயிருப்பவனுக்கு, தாய், தகப்பன், தமையன், அம்மான் இவர்களைத்தவிர மற்றவர்களை வஹித்தல், தஹித்தல், முதலியன கூடா. தன் ஜாதியைச்சேர்ந்த சவத்தின் பின் போனால் ஸ்நானம், நெருப்பைத்தொடுவது, நெய் சாப்பிடல், மறுபடியும் ஸ்நாநம், பிராணாயாமம் இவைகளால் சுத்தி. கன்னிகை, பாலன், கிழவன், அநாதன், யாகத்தால் சிறந்தவன், அங்கங்களுடன் வேதாத்யயனம் செய்தவன் இவர்களின் சவத்தைப்பின்தொடர்ந்தால் நெருப்பைத் தொடுவது, நெய் சாப்பிடல் முதலியதைச்செய்யவேண்டியதில்லை. நெருப்பு நெய் இல்லாது போனால் வியாஹ்ருதியுடன் கூடிய காயத்ரியினால் 10 தடவை அபிமந்த்ரணம் செய்யப்பட்ட குவிந்த கையில் அரை பாகத்திலிருக்கும் ஜலத்தை பானம் செய்தால் சுத்தி. பிராம்மணன் அறிந்து சூத்ரன் பிரேதத்திற்குப்பின்

போனல் 3 நாள். ஸமுத்திரத்தையடையும் நதியில் ஸ்நாநம் 8000 காயத்ரீஜபம் இவைகளைச்செய்யவேணும். 100 பிராணுபாமம் 8000 காயத்ரீஜபம், இவைகளில் ஏதாவதொன்றைச்செய்யலாம். தற்செயலாய் சூத்ரனின் சவத்திற்குப்பின் போனல் பிராம்மணனுக்கு நதியை யடைந்து 8000 காயத்ரீஜபம் செய்தால் சுத்தி. தற்செயலாய் க்ஷத்ரியனின் சவத்தைப்பின் தொடர்ந்தால் 500 தடவையும் தற்செயலாய் வைச்யனின் சவத்தைப்பின் தொடர்ந்தால் 750 (மூலபுஸ்தகத்தில் ஷட்சதம் என்றிருப்பது அச்சுப்பிழை) தடவை காயத்ரீஜபம் செய்யவேணும். பிராம்மணன் அறிந்து க்ஷத்ரியன் சவத்திற்குப்பின் போனல் 1 நாளும் வைச்யனின் சவத்திற்குப்பின் போனல் 2 நாள் அல்லது 90 நாழியும் தீட்டு. 6 பிராணுபாமம் 800 காயத்ரீ ஜபம் செய்யவேணும். க்ஷத்ரியன் வைச்யனின் சவத்திற்குப்பின் போனல் 1 நாள். சூத்ரசவத்தைத்தொடர்ந்தால் 2 நாள் அல்லது 90 நாழிகை. பஞ்சகவ்யம் சாப்பிடவேண்டும். வைச்யன் சூத்ரசவத்திற்குப்பின் போனல் 1 நாள். பிராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன் இவர்கள் சவத்திற்குப்பின் போகும் சூத்ரனுக்கு ஸ்நானமே. க்ஷத்ரியன் பிராம்மணசவத்திற்குப்பின் போனலும் வைச்யன் பிராம்மணன் க்ஷத்ரியன் இவர்களின் சவத்திற்குப்பின் போனலும், ஸ்நானம், நெருப்பைத்தொடுவது, நெய் சாப்பிடுவது இவைகளால் சுத்தி. சூத்ரனின் சவத்திற்குப்பின் போகும் சூத்ரன் சவத்தைத்தொட்டால் 1 நாள். சவத்தைத்தொடாமலிருந்தால் பகலல்லது இராத்திரி. அழுவதிலும் சவத்தைத்தொடுவதிலும் சூத்ரனுக்கு அஸ்தி ஸஞ்சயனத்திற்கு முன் பகலல்லது இராத்திரி. ஸஞ்சயனத்திற்குப்பிறகு ஸ்நானம்.

54 அழுகை விஷயம்.

பிராம்மணன் தன் ஜாதியைச்சேர்ந்தவன் விஷயமாக அழுதால் அஸ்திஸஞ்சயனமாகாமலிருந்தால் ஸ்நானம். அஸ்திஸஞ்சயனமாயிருந்தால் ஆசமனம். க்ஷத்ரியன் வைச்யன் சூத்ரன் இவர்கள் தன் ஜாதியைச்சேர்ந்தவனைப்பற்றி அழுதால் அஸ்திஸஞ்சயனத்திற்கு முன்பு உடுத்தப்பட்டிருக்கும் வேஷ்டியுடன் ஸ்நானம். ஸஞ்சயனத்திற்குப்பிறகு ஸ்நானம். பிராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன் இவர்களில் ஒருவர்க்கொருவர் தன் வருத்தத்தைத்தெரிவித்து அழுதாலவ்விதமழும் கீழ்ப்பட்ட வர்ணத்தினர்களுக்கு ஸஞ்சயனத்திற்கு முன் ஸ்நானம். ஸஞ்சயனத்திற்குப்பின் ஆசமனம். மேல்பட்ட வர்ணத்தார்க்கு ஸஞ்சயனத்திற்கு முன் 1 நாள். ஸஞ்சயனத்திற்குப்பின் ஸ்நானம். சூத்ரன் விஷயமாக ரோதனம் செய்தால் க்ஷத்ரியன் வைச்யன் இவர்களுக்கு அஸ்திஸஞ்சயனத்திற்கு முன் 2 நாள். பிராம்மணனுக்கு 3 நாள். ஸஞ்சயனத்திற்குப்பிறகு 3 பேருக்கும் 1 நாள்.

55. அஸ்தியைத்தொடும் விஷயம்.

மனுஷ்யனின் ஈரமான அஸ்தியை அறிந்து தொட்டால் அவனுக்கு 3 நாள். அறியாமல் தொட்டால் ஸ்நானம். உலர்ந்த அஸ்தியை அறிந்து தொட்டால் 1 நாள். அறியாமல் தொட்டால் ஆசமனம். 5 பஞ்சநகம் (5 நகமுள்ள) என்று சொல்லப்படும், பெரிய முள்ளுள்ள பன்றி, சிறிய முள்ளுள்ள பன்றி, உடும்பு, முயல், ஆமை தவிர பாக்கி பக்ஷிக்கக்கூடாத மிருகங்களின் ஈரமான அஸ்தியைத்தொட்டால் ஸ்நானம். உலர்ந்த பிறகு தொட்டால் ஆசமனம்.

56. எல்லோருக்கும் பொதுவான விஷயம்.

தாயின் பந்துக்கள், குரு, தோழன். ஸபிரம்மசாரி, மாதாமகன், மாதுலன் முதலியோர், கன்னிகை, பாலன் இவர்களின் மரணம், ஸ்ராவம், பாதம், ஸோதகனின் மரணம, இவைகளாலுண்டாகும் தீட்டு, கடந்து போன தீட்டு, ரஜஸ்வலையின் தீட்டு, இவைகளின் காலம் எல்லா வர்ணங்களுக்கும் ஒரே விதமானது. தீட்டுடன் சேர்ந்த தீட்டுப்போவதும் எல்லா வர்ணத்திற்கும் பொதுவானது.

57. ஒரு விஷயத்தில் அதிகமாகவும் அல்பமாகவும் தீட்டு சொல்லப்பட்டிருந்தால ஸமீபத்தில் அதிகத்தையும் மறைவில் (தூரதேசத்தில்) அல்பத்தையும் அனுஷ்டிக்கவேண்டும்.

58. தீட்டின் முடிவில் செய்யவேண்டியது.

பிராம்மணனுக்குத்தீட்டுக்காத்த பிறகு ஜலத்தையும், க்ஷத்ரியனுக்கு வாஹனம் ஆயுதம் இவைகளையும், வைச்யனுக்கு சாட்டை கடிவாளம் இவைகளையும், சூத்ரனுக்குத்தடியையும் தொட்டு சுத்தி. தீட்டுப்போனபிறகு வீட்டுக்கு பெருக்குதல், சாணமிடுதல், புண்யாகவாசனம் செய்தல் இவைகளால் சுத்தி.

அபிநவாசௌசஸாரஸங்க்ரஹம்

முற்றிற்று.

கடின பதங்களின் பொருள்.

புனுலோமம்— உயர்ந்தஜாதி புருஷனுக்கும் தாழ்ந்த ஜாதி பெண்ணுக்கும் பிறந்தவன்.

ரசன்— தன் ஜாதியில் விவாஹம் பண்ணின மனைவியிடத்தில் தனக்குப்பிறந்தவன்.

க்ஷத்ரஜன்— மாமனர் முதலியோரால் ஏவப்பட்ட, மரித்தவன் நபும்ஸகன் அல்லது வியாதியுள்ளவன் இவனுடைய மனைவியிடத்தில் உண்டுபண்ணப்பட்டவன்.

ந்தன்— ஆபத்காலத்தில் தாய் அல்லது தகப்பனுல் ஜலம் வார்த்து ஸஜாதீயனுக்குக்கொடுக்கப்பட்டவன்.

ருத்ரிமன்— ஸஜாதீயனும் பித்ருகர்மாவைச்செய்தல் செய்யாமை இவைகளில் குணம் தோஷமறிந்தவனும் தகப்பன் தாயிடத்தில் சரியாக நடந்துகொண்டுமிருந்து பிறரால் ஸ்வீகரிக்கப்பட்டவன்.

டாத்பன்னன்— ஒருவன் வீட்டில் அவன் பார்யையிடம், உண்டுபண்ணினவன் யாரென்று தெரியாமல் உண்டானவன்.

பித்தன்— தாய் தகப்பன் அல்லது அவர்களில் ஒருவரால் விடப்பட்டு பிறரால் ஸ்வீகரிக்கப்பட்டவன்.

ீனன்— தகப்பன் வீட்டில் கன்னிகையிடத்தில் ரகசியமாகவுண்டானவன்.

றாடன்— அறிந்தோ அறியாமலோ கர்ப்பிணியாயிருக்கும்போது விவாஹம் செய்யப்பட்ட ஸ்த்ரீயிடத்தில் உண்டானவன்.

னர்பவன்—பதியினுல் தள்ளப்பட்டோ விதவையாகவோ

இருக்கும் ஸ்த்ரீ தன்னிஷ்டப்படி விவாஹம் செய்து கொண்டு பெற்ற பிள்ளை.

ஸ்வயம் ஜாதன்— (ஸ்வயம் தத்தன் என்பது மனுஸ்மிருதி பாடம்) தாய்தகப்பனில்லாமலோ அவர்களால் த்வேஷம் முதலியதால் தள்ளப்பட்டோ இருந்து, தன்னைப் பிறருக்கு தானம் செய்தவன்.

சூத்திரன்— (சௌத்ரன் என்பது மனுஸ்மிருதி பாடம்) தாசியிடத்தில் சூத்திரனுக்குண்டானவன்.

பீஜீ— பரகளத்திரத்தினிடத்தில் கர்ப்பாதானம் செய்தவன்.

க்ஷேத்ரீ— ஷி களத்திரத்திற்கு ஸ்வாமி.

பூர்வஜுஷ்டன்— முன்னோர்களால் வரிக்கப்பட்டவன்.

ஸ்யம்வ்ருதன்— தன்னால் வரிக்கப்பட்டவன்.

யோனிசம்பந்தமுள்ளவர்கள்— பிதாமகன், பிதாமஹி, அவன் ப்ராதா, மாதாமகன், மாதாமஹி, அவன் ப்ராதா, அம்மான், அவன் பிள்ளை முதலியோர், சிறியதாயார், பெரியதாயார், அவர்கள் பிள்ளை முதலியோர், அத்தை, அவள் பிள்ளை முதலியோர், சகோதரி, அவள் பிள்ளை முதலியோர்.

ஸங்கவம்— ஐந்து பாகமாகப்பிரிக்கப்பட்ட பகலில் இரண்டாவது காலம்.

யோஜனம்— சுற்றேறக்குறைய 12 1/8 மைல் என வைத்யநாத தீக்ஷிதீய வ்யாக்யானம். 8 அல்லது 9 மைல் என ஆப்டே. தத்தனைத்தவிர மற்றப்புத்திர பிரதிநிதிகளை ஸ்விகரிப்பது கலியில் மறுக்கப்பட்டிருக்கிறது.

178241

அபிநவாசௌசஸங்க்ரஹம்.- (ஸம்ஸ்க்ருதம்-
நாகராக்ஷரம்) 0—6—0

ஷை ஸாரம் தமிழ் 0—4—

இரண்டும் சேர்ந்து 0—8-

திருக்கண்டியூர் என்கிற கண்டன க்ஷேத்ர மாஹாத்ம்யம் தமிழ் அர்த்தத்துடன் } 0--

---

கிடைக்கும் இடம்:—

மானேஜர்,

ஸ்ரீநிவாஸ ப்ரஸ்,

திருவாதி.